சிறந்த
போட்டோக்களுக்கு
பாரத்
ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்.
போன் :———————252

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

ஏடு 7 EELA NADU இதழ் 93
National Tamil Daily தேசிய தினசரி
(15-5-65)
விசுவாவசு வைகாசி 2 முஹர்ரம் பிறை 13 சனிக்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு – 12 போன்: 5830

# "பிரச்னைகளைத் தீர்க்க ஒன்றுசேருவோம்"

## காங்கிரஸ்வாலிபமுன்னணி மாநாட்டில் ஜி. ஜி. அழைப்பு

### "தமிழரின் கஷ்டங்களை மூன்று வருடங்களில் தீர்க்காவிடில் பதவியை உதறித்தள்ளுவேன்"

யாழ்ப்பாணம், சனி

"இரண்டு மூன்று வருடத்தில் தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்காவிடின் எனக்கு இப்பதவி தேவையில்லை தேர்தல் சமயத்திலும் நான் இவற்றையே கூறிவந்தேன். நான் சொன்னபடியே செய்வேன்" என்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிமகாநாட்டில், தமிழ்க்காங்கிரஸ்தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும் போது கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கு மந்திரிகளை அழைத்துவந்தது, மக்களின் கஷ்டங்களை அவர்களுக்கு நேரில் காட்டுவதற்கேயன்றி கட்சியை வளர்ப்பதற்காகவல்ல வென்றும் மந்திரிகளை அழைத்து கட்சியை வளர்க்க வேண்டிய நிலையில் தமிழ்க்காங்கிரஸ் இருக்கவில்லையென்றும், திரு. பொன்னம்பலம் மேலும் கூறினார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 20-ம் ஆண்டு மகாநாடு நேற்றுக்காலை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கட்சிக்கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து திரு. செல்லத்துரை கட்சிகீதம் பாடினார்.

#### வாலிப முன்னணி

மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் கலந்துகொண்ட தமிழ்க்காங்கிரஸ வாலிப முன்னணி மகாநாடு யாழ்ப்பாணமாநகர மண்டபத்தில் நேற்றுக்காலை 9-30 மணிக்கு ஆரம்பமானது தமிழ்க்காங்கிரஸ வாலிப முன்னணித் தலைவர் திரு. எம். எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் மகாநாடு ஆரம்பமானது.

தமிழ்க்காங்கிரஸ தலைவர் திரு. ஜி ஜி பொன்னம்பலம், இணைக்காரியதரிசிகளான திருவாளர்கள் ரி சங்கரப்பிள்ளை, க இராசநாயகம், வவுனியா எம் பி, திரு ரி சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம் பி திரு எம் சிவசிதம்பரம், கிளிநொச்சி முன்னாள் எம் பி திரு ஏ சிவசுந்தரம், சாவகச்சேரி முன்னாள் எம் பி திரு வி குமாரசாமி, செனட்டர் எஸ் ஆர். கனகநாயகம், சாவகச்சேரி தமிழ்க்காங்கிரஸ கிளை தலைவர் பாரிஸ்டர் எம் சிவானந்தன், உடுவில் தமிழ்க்காங்கிரஸ கிளை தலைவர் திரு என் சிவநேசன், காங்கேசன்துறை தமிழ்க்காங்கிரஸ கிளை தலைவர் திரு எஸ் சிதிபாஸ்கரன், நல்லூர் தமிழ்க்காங்கிரஸ கிளை தலைவர் திரு சி அருணம்பலம், வட்டுக்கோட்டை தமிழ்க் காங்கிரஸ கிளை



தலைவர் திரு சுப்பிரமணியம், கோப்பாய் தமிழ்க்காங்கிரஸ கிளை தலைவர் திரு ரி குணரத்தினம், தமிழ்க் காங்கிரஸ வாலிப முன்னணி இணைக்காரியதரிசிகள் திரு ஆனந்தராசா, திரு நூர்முகம்மது, கொழும்பு தமிழ்க்காங்கிரஸ இணைக்காரியதரிசி திரு அலெக்சியஸ் ஆகியோர் மேடையில் வீற்றிருந்தார்கள்.

நகர மண்டபம் தமிழ்க்காங்கிரஸ கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது நகர மண்டபத்தினுள் ஒவ்வொரு தொகுதிக்கும தனித்தனி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன மேடைக்கருகில் உள்ள முன்வரிசையில் திருமதி ஜி ஜி பொன்னம்பலம் அமர்ந்திருந்தார்

தமிழ்க்காங்கிரஸ் கொடி பொறித்த துவாய்களை மகாநாட்டு பிரதிநிதிகள் அணிந்திருந்தார்கள் அவை மகாநாட்டில் விற்பனை செய்யப்பட்டன திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் படங்களும், மகாநாட்டில் விற்பனை செய்யப்பட்டன

#### என்வழியைப் பின்பற்றினர்

திரு. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: 1948-ம் ஆண்டு நான் மந்திரி சபையில் இருந்தபோது என்னைக்குறை கூறியவர்கள் 17 வருடங்களுக்குப்பின் என் வழியைப் பின்பற்றியிருக்கிறார்கள். அன்று, தமிழர்களின் மொழிப் பிரச்னையோ, வேறு பிரச்னைகளோ இல்லாத போது தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்காக, நல்வாழ்விற்காக நான் மந்திரி சபையில் இருந்தேன். ஆனால் இன்று தமிழர்களின் பல பிரச்னைகள் தீர்க்கப்படாதசமயத்தில் மந்திரி பதவியை ஏற்றுள்ளார்கள்.

#### வேலையில்லாத் திண்டாட்டம்

தமிழ் வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி நாங்கள் பல தட்வை ஆலோசனை செய்துள்ளோம். கடந்த தேர்தலில் எங்களுக்குப் பெருமளவில் பாடுபட்ட வாலிபர்களின் எதிர்காலத்தை மலரச் செய்வது எங்களின் கடமை;

#### "கஷ்டத்தைக் கூறுங்கள்"

சாப்பாடு இல்லாமல் பசி இருக்கிறவர்களுக்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் கஷ்டப் படுகிறவர்களுக்கும், கட்சிபேதம் கிடையாது. ஆதலால் வாலிபர்கள், தங்கள் பிரச்னைகளை கட்சிபேதமின்றி தெரிவிக்க வேண்டும். ... வெற்றிபெறுவதற்கு மட்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

## "கல்வித்துறையில் பின்நிற்கக்கூடாது"

### முஸ்லிம் சமூகத்தினருக்கு உதவிமந்திரி முஸ்தாபா புத்திமதி

கல்முனை, வெள்ளி

"முஸ்லிம்சமூகத்தினர்கடந்த பொதுத்தேர்தலில் தங்கள் விரோதிகளுக்கெதிராக உறுதியாகவும் திடமாகவும் நடந்து கொண்டார்கள். அவர்கள் அப்படி நடந்துகொண்டதன் காரணத்தினாலேயே தேசிய அரசாங்கம் பதவிக்கு வர முடிந்தது" என்று சமூகசேவைகள் உதவி மந்திரி திரு. எம். எம். முஸ்தபா கிழக்கு மாகாண முஸ்லிம் ஆசிரிய சங்கக் கூட்டமொன்றில் பேசும் பொழுது குறிப்பிட்டார்

கூட்டத்திற்கு திரு ஜே. எம். எம். அப்துல்காதர் தலைமை வகித்தார்.

தொடர்ந்து திரு. முஸ்தபா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"கல்வித்துறையில் முஸ்லிம் மக்கள் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும், இதுவரை காலமும் அவர்கள் வியாபாரத்திலேயே தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தனர். தற்பொழுதுள்ள சூழ்நிலையில் முஸ்லிம் சமூகத்தினர் இதனைக் கைவிடாமல் நன்மையாகவிருக்கும்.

டாக்டர் பதியுதீன் மஹ்மூது கல்விமந்திரியாக இருந்த காலத்தில் பிரதானமாக முஸ்லிம்களுக்கு அவர் எவ்வளவோ நன்மைகள் செய்திருக்கின்றார்.

1960-ம ஆண்டில் முஸ்லிம் ஒருவர் கல்விமந்திரியாக நியமிக்கப்பட்டபொழுது முஸ்லிம்களுக்கு விசேஷ உதவிகள் ஒன்றும் கவனிக்கப்படவில்லை".

## "சகலருக்கும் நீதி வழங்கப்படும்"

— தபால் மந்திரி

அங்கம, வெள்ளி

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டரசாங்கம் காலத்தில் நாட்டில் லஞ்சமும் ஊழல்களும் மலிந்திருந்தன, இதனைப் பொறுக்காத மக்கள் அந்த அரசாங்கத்தை வீழ்த்தி ஐக்கிய தேசியக் கட்சியைத் தெரிவு செய்தனர்" என்று தல்டுவ எனுமிடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் தபால் தந்தி மந்திரி திரு மொண்டேகு ஜயவிக்கிரமா பேசுகையில் கூறினார்.

தேசிய அரசாங்கத்தை அமைத்தது ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி அல்ல என்றும் ஜனநாயகத்தை விரும்பும் மக்களின் வெற்றி அது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் நலன்கருதி இந்த அரசாங்கம் சகல சமூகத்தினருக்கும் நீதி வழங்கும் எந்தச் சமூகத்தினருடனும் பாரபட்சமாக நடந்துகொள்ளாது என்றும மந்திரி கூறினார்.

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி கிராமக்கோர்ட் தலைவராகக் கடமையாற்றிய திரு. கே. சி. நவரத்தினம் முல்லைத்தீவுக்கு இம்மாதம் முதல் மாற்றலாகிச்சென்றுள்ளார்.

## உங்களுக்கும் அதிர்ஷ்டம் உண்டா?

### தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 87-வது இலக்க தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதற்பரிசு
08 C 0342 ரூ 34-840

இரண்டாம் பரிசு
12 G 0101 ரூ 18-986

மூன்றாம்பரிசு
06 M 0618 ரூ 8-484

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518 தந்தி: "யப்பான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எமது இலங்கா தயாரிப்புக் களை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கும் பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்கு பிரதிநிதிகளும் உடனே தேவை. பெண்களுக்கு வாகன வசதியுண்டு. விண்ணப்பிக்கவும், மனேஜர், இலங்கா லபோறற்றறீஸ்—உடுவில், சுன்னாகம். 265

தையல் வேலைகளில் அனுபவம் வாய்ந்த மூன்று பெண்கள் தேவை. இம்மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து 11 மணி வரையில் நேரில் சந்திக்கவும். ("தமிழ்நேசன்" அருகாமையில்) றஹிமான் இண்டஸ்றீஸ், 30, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 269

ஓர் உதவி மனேஜரும், ஒரு கஷ்சியரும் ஆங்கில கனிஷ்ட தராதரத்துடனும், முறையே 750-00, 1000-00 ரொக்கமாகப் பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் உடன் தேவை. சம்பளம் சகல படிகளுட்பட 120-00, 110-00 வழங்கப்படும். விளம்பர இல: 262, 'ஈழநாடு' மேற்பார்த்து. 262

நன்றாக சமைக்கத் தெரிந்த சமையல்காரன் தேவை. கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். "இரத்தினகிரி", அராலி வடக்கு. 257

### மனேஜர் தேவை

வண்—நாவலர் பல. நோ. கூ. சங்கத்திற்கு மனேஜர் ஒருவர் தேவை. விண்ணப்பம் 26-5-65 க்கு முன் பதிவுத் தபால் மூலம் காரியதரிசிக்கு அனுப்பப்படவேண்டும். தகுதி: (1) கூட்டுறவுப்பயிற்சித் தராதரம், வியாபார அனுபவம்; (2) J. S. C. வகுப்புக்குமேல் சித்திபெற்றவர். (3) வயது 25 முதல் 40 வரை; (4) அண்மையில் பெற்ற மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள்; (5) ஆரம்ப சம்பளம்: 100 ரூபாமாத்திரம். (6) பிணை: 1000 ரூபா ரொக்கம்; 8000 ரூபா ஆதனம். காரியதரிசி வண்—நாவலர் ப. நோ. கூ. சங்கம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 14-5-65. 268

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஸ்டான்லி றோட் இலக்கம் 39, வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் வீடும் மூன்று பரப்புக்குமேல் வளவும் விற்பனைக்குண்டு. சிவகுரு, 9, கச்சேரி கிழக்குஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 247

இயந்திரங்களால் இயக்கப்படும் 30×9 1/2, 28×8 1/2, 27 1/2×8 (மூன்று) அளவுகளைக் கொண்ட ஈஸ்த்லைன்டர் மாதிரி ஐந்து புதிய வள்ளங்கள்—இரண்டு இலுப்பை பலா மரத்தாலும் மூன்று பனைமரத்தாலும் செய்யப்பட்டவை. இயந்திரங்கள் பூட்டப் படாதவை. கடன்வசதி ஒழுங்குகள் செய்யலாம். விபரங்களுக்கு எழுதவும்:
G. A. Peter Fernando, 86, Delasalle Street, Mutwal 245

நல்ல நிலைமையிலுள்ள இயந்திர வள்ளம்—நீளம் 37 அடி அகலம் 9 1/2 அடி, சீரான தளம். ரஸ்டன் என்ஜின் 3YDM 46 H.P. மரீன் இன்டஸ்றீஸ் வள்ளத்தளம். வல்வெட்டித்துறையில் காலை 9 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் பார்வையிடலாம். C. C. சோமசேகரம், புரக்டர், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்றவிலாசத்தில் 31-5-65க்கு முன் தங்கள் விலை கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும். 266

### வகுப்புகள்

ஜி. ஏ. கியூ., ஜி.சி.ஈ.உயர்தரம், ஜி. சி. ஈ. சாதாரணம், ஜி. சி. ஈ. முதல்வருடம், ஆங்கிலம்/தமிழ், குறுக்கெழுத்து, தட்டியல், கணக்கியல், வர்த்தகம், சிங்களம் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. யுனைட்டெட் இன்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி, 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 264

### சிங்கள வகுப்பு

சிங்கள வகுப்புக்கள் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் தனித்தனி நடாத்தப்படும். விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி. 287

தொய்வு, சுசம், நீரிழிவு, வெண்ணை முதலிய பல கொடிய வியாதிகள் குணம்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும், மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சைபெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தமிழரசு வாலிப முன்னணி

யாழ்ப்பாணம், வெள்ளி

சுன்னாகம் தமிழரசு வாலிப முன்னணிக் கிளைக் கூட்டம் திரு. கே. செல்வேந்திரா தலைமையில் நடைபெற்ற பொழுது வாசிக சாலை; இராப்பாடசாலை அரசியல் வாத வகுப்புகள் மாதாந்தக் கருத்தரங்கம் முதலியன நடைமுறைக்கு கொண்டு வரப்பட வேண்டுமென்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 20 பேர்களடங்கிய ஒரு மத்திய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கூட்டத்தின்போது உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் சமூகம் கொடுத்திருந்தார்;

## சகாயவேலைத் திட்டம்

பருத்தித்துறை, வெள்ளி

கடும் வரட்சியாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட வர்கட்கு புனர்வாழ் வளிக்குமுகமாக வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த நாகர் கோவிலில் ஆரம்பமான முதலாவது சகாயவேலைத் திட்டப்பணிநேற்றையதினத்துடன் முடிவடைந்தது. 7000 அடிநீளமான வெள்ள வாய்க்கால் வெட்டும் இவ்வேலையில் நாகர் கோவில், குடாரப்பு ஆகிய இடங்களைச் சேர்ந்த நாற்பது பேர் சுமார் ஒருவார காலம் ஈடுபட்டனர்.

இவர்கட்கு நாளொன்றுக்கு ஒருரூபா நாற்பது சதவீதம் பணம் வழங்கப்பட்ட போதிலும் இவ்வேலையின் பெறுமதி சுமார் 2000 ரூபாவரை இருக்குமென மதிப்பிடப்பட்டது.

## அ. கு. சே. சங்க கூட்ட விவகாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த மாதம் நடைபெற்ற அரசாங்க குமாஸ்தா சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைக் கூட்டத்திற்கு போதிய அறிவித்தல் கொடுக்கப்படவில்லை என்பதற்கு பழைய காரியதரிசியே பொறுப்பானவர் என்றும் அங்கத்தவர்கள் மீண்டும் ஒரு விசேஷ பொதுக் கூட்டத்தைக் கூட்டவேண்டுமென்று தம்மிடம் கோரினல் விசேஷ கூட்டத்தைக் கூட்ட தாம் நடவடிக்கை எடுக்க முடியும் என்று கிளையின் செயலாளர் திரு. எஸ். இரத்தின சபாபதி தெரிவித்துள்ளார்.

முன்னைய காரியதரிசி ஏப்ரல் 28 ல் ஒரு கூட்டத்தை கடந்த 22 ம் திகதியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றை கொடுத்திருந்தார்; அது போதிய அவகாசமில்லையெனக் கருதப்பட்டால் அது அவர் பக்கத்தில் உள்ள தவறே என்றும் அவரே அக்கூட்டத்தில் பிரசன்னமாயிருந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

## தொழிலாளர்களுக்கு மாடி வீடுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

கடிகாவத்தை, சங்கராஜ மாவத்தை, மருதானை முதலிய இடங்களில் தொழிலாளர் வசிப்பதற்காக புதிய மாடி வீடுகள் அமைக்கும் திட்டமொன்றை தாம் நடைமுறைக்கு கொண்டுவரப்போவதாக தொழில் வீடமைப்பு மந்திரி திரு. எம். எச். முகமட் கொழும்பில் வீடுகள் கட்டு [illegible] அறிவித்துள்ளார்.

# கிழக்கு மாகாணத்திற்கும் இரட்டைத்தட்டு பஸ்?

## மந்திரி ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

கிழக்கு மாகாணத்தில் இரட்டைத் தட்டு பஸ்களை சேவையில் அமர்த்துவது குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இது சம்பந்தமாக தேசிய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாச வடக்கு மாகாணத்திலுள்ள இ. போ. ச. டிப்போக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுடன் ஆலோசனை நடத்தவிருக்கிறார்.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை அண்மையில் தேசிய சேவைகள் மந்திரியைச் சந்தித்து இதுபற்றிப் பேசியதாகவும் அங்குள்ள பஸகள் யாவும் மோசமான நிலையில் இருப்பதால் விரைவிலேயே புதிய பஸ்களைத் தந்துதவுமாறு மந்திரியை அவர் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. திரு. மத்தீன் சின்னலெப்பை, கொழும்புக்கும் மட்டக்களப்புக்குமிடையே கடுகதி பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு இ. போ. ச. வைக் கேட்டுள்ளார்.

## திருடர் தொல்லை அதிகரிப்பு

கோப்பாய், வெள்ளி

அச்சுவேலியில் திருடர்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. அச்சுவேலி தெற்கு சிவசம்பு என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து ரூ. 2000 பெறுமதியான பொருட்களைக் களவாடினர், அன்றிரவு ஐந்து வீட்டிற்குள் கள்வர் நுழைந்தனராம்.

## கிணற்றுக்குள் விழுந்த யானை

சொர்ணதோட்டம், வெள்ளி

டிக்கோயாவிலுள்ள தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள ஒரு 20 அடி ஆழமுள்ள கிணற்றுக்குள் ஒரு காட்டு யானை இரவில் விழுந்ததன் காரணமாக மொனருகலை அரசாங்க அதிபரும் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரியும் யானையை கிணற்றுக்குள் இருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டனர். கிராமவாசிகளின் உதவியுடன் கிணற்றோரமாக ஒரு பெரிய கிடங்கை வெட்டி யானையை வெளியேற்ற தற்பொழுது துரிதமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த யானையின் அவலநிலையை பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் அவ்விடத்தில் தினமும் கூடுகின்றனர்.

## "ஹன்சாட்" 50 சதம்

வெள்ளவத்தை, வெள்ளி

கொழும்பிலே இப்போது ஜனப்பிரதிநிதிகள் சபைக் ஹன்சாட் பிரதி ஒன்று 50 சதவீதம் நடைபாதை வியாபாரிகளால் விற்கப்படுகின்றது. இவ் வியாபாரிகள் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்தில் ஏராளமான இப் பிரதிகளை 30 சதப்படி வாங்கி வெளியிலே 50 சதப்படி விற்பனை செய்கின்றனராம். அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலேயுள்ள "ஹன்சாட்" பிரதிகள் விற்பனை செய்யப்பட்டு முடிந்தால், பொதுமக்கள் கூடுதலான பணம் கொடுத்து இவற்றை வாங்க வேண்டியிருக்கிறதாம்.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பினிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-85.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,

161, நோரிஸ் ரோடு,

கொழும்பு-11.



தெய்வ வழிபாட்டிற்கும்

உங்கள் இல்லங்களை

வாசனையால் பரிமளிக்கச் செய்யவும்

நறுமணம் கமழும் மனோரம்மியமான

"ராதா"

★ 99 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி

★ 999 ஸ்பெசல் ஜவ்வாது வத்தி

★ ஜெகன்மோகன் ஜவ்வாது வத்தி

★ பத்மினி ஜவ்வாது வத்தி

மற்றும்

★ லீலா ஜவ்வாது ★ ஸ்பெசல் அம்பர்

★ இந்திராணி ★ கிறீன் தர்பார்

வத்திகளையே

உபயோகித்து ஆனந்தமடையுங்கள்!

இலங்கையில் முதல்தரமான தயாரிப்புகள்.

எல்லா வியாபாரிகளிடமும்

கிடைக்கும்.

தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனதிகள் வியாபாரம்)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 541, 7068

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் புயலில் 202 பேர் பலியாகினர்!

கராச்சி, மே 14

கிழக்கு பாகிஸ்தான் புயலில் இதுவரை 202 பேர் பலியாகியிருப்பதாயும், 400 பேர் காயமடைந்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. 1 லட்சம் பேர் வீடிழந்தனர்.

கால்நடைகளுக்கும், பயிர்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும், உடனடியாக ரூபா 5 லட்சம் நிவாரணஉதவி வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறதென்றும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

# அரிசி சப்ளைசெய்ய பாகிஸ்தான் மறுப்பு

புதுடில்லி, மே 14

ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தப்படி இந்தியாவுக்கு அரிசி சப்ளை செய்ய பாகிஸ்தான் மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

இந்த ஒப்பந்தப்படி பாகிஸ்தான் 80000 டன் அரிசி இந்தியாவுக்குத்தர வேண்டும். இதுவரை மூன்றில்ஒரு பங்கு மட்டுமே அது கொடுத்திருக்கிறது என்றும் மிகுதியைத்தர மறுக்கப்பட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து கல்கத்தாவுக்கு மீன் அனுப்புவதையும் அதுநிறுத்திவிட்டது. வழக்கமாக நாள் ஒன்றுக்கு 1000 டன் மீன் கிழக்கு பாகிஸ்தான் கல்கத்தாவுக்கு அனுப்பிவந்தது.

# டொமினிக்கன் குடியரசில் புதிய கைகலப்புக்கள்

நியுயோர்க், மே 14

டொமினிக்கன் குடியரசு பற்றி பாதுகாப்புசபை ஆராய்ந்து கொண்டிருக்கும் அதே சமயத்தில் தலைநகர் சாந்தா டொமிங்கோவில் புதிய சண்டைகள் ஆரம்பமாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கர்னல் கமாஹேவின் கிளர்ச்சித் துருப்புகளுக்கும் அமெரிக்க துருப்புகளுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பில் இரு அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சிக்காரர்களின் ஒரு பகுதியினர் வசமிருந்த ரேடியோ நிலையத்தின்மீது மற்றைய பகுதியினரின் விமானங்கள் குண்டுமாரி பொழிந்து சேதப்படுத்துவதாய் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அமெரிக்க ஸ்தாபனங்களின் சமாதானப் படைகள் டொமினிக்கனுக்கு வர ஆரம்பித்துள்ளன. ஹொண்டுராஸிலிருந்து 250 துருப்புகளும் கோஸ்டா ரீகாவிலிருந்து 20 பொலிசாரும் நேற்று வந்தனர்.

# உடன் வெளியேறும்படி பிரிட்டிஷ் நிருபருக்கு உத்தரவு

புதுடில்லி, மே 14

உதகமண்டலத்தில் ஷேக் அப்துல்லாவைச் சந்தித்த பிரிட்டிஷ் நிருபர் தாமஸ் ஸ்டேஸியை உடன் இந்தியாவைவிட்டு வெளியேறுமாறும், மீண்டும் இந்தியாவுக்கு வரக்கூடாது என்றும் உத்தரவிடப்படும் என உள்நாட்டு மந்திரி திரு. நந்தா நேற்று லோகசபையில் கூறினார்.

"சண்டே டைம்ஸ்" பத்திரிகையின் நிருபரான ஸ்டேஸி கடந்த ஏப்ரல் 20-ம் திகதி கராச்சிக்குச் சென்றிருந்தார் என்றும் கட்ச் நிலைமைபற்றி ஆராய அவர் வருகைக்கு லண்டனிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன் அனுமதி வழங்கியதென்றும் தெரியவந்திருக்கிறது.

ஷேக்அப்துல்லாவைச் சந்தித்தபின் திரு. ஸ்டேஸி ஒரு அறிக்கை விடுத்தார்.

மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் ஆலோசனை கலந்ததென்றும் தற்போது அவரை நாடு கடத்துவது போதுமானது என முடிவுசெய்யப்பட்டதாயும் நந்தா அறிவித்தார்.

ஷேக்அப்துல்லாவுக்கு பந்தோபஸ்து மேலும் கடுமையாக்கப்படும் என்றும் தேவையானல் மேலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் இந்தியாவுக்கு வருவார்

மாஸ்கோ, 14

இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரியும், ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜினும் நேற்று மூன்று மணிநேரம் சம்பாஷணை நடத்தினர்.

சீன, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு உட்பட பரந்த அளவில் உலகப் பிரச்னைகள் பற்றி அவர்கள் விவாதித்தனர்.

இந்தியாவின் சுதந்திரம்தான் இதர நாடுகளின் விடுதலைக்கு வழிவகுத்தது என திரு. கோஸிஜின் அப்போது கூறினார்.

இந்தியாவுக்கு விஜயம்செய்யுமாறு திரு: சாஸ்திரி விடுத்த அழைப்பை ரஷ்யப் பிரதமர் திரு: கோஸிஜின் ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

1970-ம் ஆண்டுக்குள் ரஷ்யா-இந்திய வர்த்தகம் இரட்டிப்பாகுமென்று திரு கோஸிஜின் கூறினார்.

இரு தலைவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது திட்டக் கமிஷன் உப தலைவர் திரு. அசோக் மேத்தாவும் உடனிருந்தார்.

நேற்று சாஸ்திரி மாஸ்கோவிலுள்ள பாரத தூதராலயத்தில் ரஷ்யத் தலைவர்களுக்கு ஒரு விருந்தளித்தார்.

ரஷ்யப் பிரதமருடனும், இதர மந்திரிகளுடனும் திரு. சாஸ்திரி ஒரு [illegible] காணவந்த போது [illegible] மக்கள் எழுந்து நின்று ஆரவாரம் செய்தனர்.

## விசாகையில் ரூ. 30 கோடி ஆலை

புதுடில்லி, மே 14

விசாகப்பட்டினத்தில் போலந்தின் உதவியுடன் துத்தநாகத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கு ரூ. 30 கோடி செலவாகும்.

## மாறுவேடத்தில் வந்து தாக்கினர்

சைகோன், மே 14

சைகோனுக்கு 5 மைல் தூரத்தில் வியட்காங் கொரில்லாக்கள், அரசாங்க மாலுமி துருப்புகளைப் போல் உடையணிந்துவந்து துணி ஆலை ஒன்றைத் தாக்கினார்கள். அங்கிருந்து 5 காவலாளிகளையும் அவர்கள் சுட்டுக்கொன்றனர், ஒரு சிப்பாய்க்கும், 3 சிவிலியன்களுக்கும் காயமேற்பட்டது.

## சாஸனத்தை ரத்துசெய்க

நைரோபி, மே 14

தென்ரொடீஷியாவின் அரசியல் சாஸனத்தை ரத்துச் செய்யுமாறு கென்யா பிரிட்டனைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

## போர்த்துக்கலை விலக்கக் கோரிக்கை

பாரிஸ், மே 14

ஐ. நா. கல்வி, சமூக,கலாச்சார ஸ்தாபனத்தின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் போர்த்துக்கலை விலக்கிவைக்குமாறு இந்தியாவும், 7 ஆபிரிக்க நாடுகளும் தீர்மானம் கொண்டுவந்திருக்கின்றன.

## ஆசிரியர் சங்க கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி

வலி-மேற்கு தமிழ்த் தராதரப்பத்திர ஆசிரியர் சங்கத்தின் விசேஷ கூட்டம் சங்கத் தலைவர் திரு. வே. சரவணமுத்து தலைமையில் சுன்னாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. பின்வரும் கோரிக்கையை கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கு சமர்ப்பித்துள்ளனர்.

"1946-ம் ஆண்டு தொடக்கம் எமது நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுதற்கு முன்பு இருந்த அரசாங்கங்கள் முன்வரவில்லை. எமது சம்பள விதத்தில் இழைக்கப்பட்ட அநீதியை நாம் தக்க புள்ளி விபரங்களுடன் எடுத்துக்காட்டிவந்துள்ளோம். இதுவரை எவ்விதமான பலனும் கிட்டவில்லை. இனிமேலும் நமது விஷயத்தில் கூடிய கவனம் செலுத்தி நியாயம் வழங்கவேண்டிய ஒழுங்குகளை காலதாமதமின்றி கவனிக்க வேண்டுமென இச் சபைவேண்டிக்கொள்கின்றது"

## ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

மேலதிகமாக ஆறு ஆயுர்வேத ஆஸ்பத்திரிகளைத் திறக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பெலிபத்தையிலும், இரத்தினபுரியிலும் இரண்டு இடங்கள் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அநுராதபுரத்திலும், பொரளையிலும் இரண்டு ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

[illegible] அரசாங்கம் 100 ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் திறப்பதற்காகத் தீர்மானித்துள்ளது.

## உளவுசொன்னவருக்கு 30 ஆண்டு சிறை

நியுயோர்க், மே 14

முன்னாள் ராணுவத்தினரான ராபர் ஜோன்ஸன் ரஷ்யாவுக்கு உளவு கூறியதற்காக 30 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். அமெரிக்க ராக்கெட் நிலையங்கள்பற்றியும், அமெரிக்க உளவு இலாகா நடவடிக்கை பற்றியும் கடந்த 1957-ம் ஆண்டு முதல் அவர் உளவு கூறி வந்தாராம்.

## "நிபந்தனையற்ற சமாதான பேச்சு" — ஜோன்ஸன்

வாஷிங்டன், மே 14

வியட்னாம் பற்றி நிபந்தனையற்ற சமாதானப் பேச்சு நடத்த தாம் தயாராய் இருப்பதாக ஜனாதிபதி ஜோன்ஸன் மீண்டும் தெரிவித்திருக்கிறார்.

அங்கு ராணுவத் தீர்வு சாத்தியமில்லையென்றும், ஆனால் தனது நேசநாடுகளுக்கு எத்தகைய அழிவு ஏற்பட்டபோதிலும் சண்டையை அங்கு நீடிக்க சீனா விரும்புகிறதென்றும் அவர் கூறினார்.

மே. ஜெர்மனியுடன்

## அரபுநாடுகள் உறவை முறித்தன

பொன், மே 14

மேற்கு ஜெர்மனி இஸ்ரேலுடன் ராஜீய உறவை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து ஜோர்டான், சிரியா, ஏமன், எகிப்து, அல்ஜீரியா, சவூதி அரேபியா ஆகிய அரபுநாடுகள் பொன்னுடன் தங்கள் உறவுகளை முறித்துக்கொண்டு விட்டன.

லிபியா, மொராக்கோ, டுனிஸியா ஆகிய நாடுகள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. இதைத்தொடர்ந்து எகிப்தில் கடமையாற்றிய அநேக மேற்கு ஜெர்மன் ராக்கெட் நிபுணர்கள் அங்கிருந்து புறப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## பக்தூனியர் மீது அடக்குமுறை

புதுடில்லி, மே 14

பக்தூனிஸ்தானியர் மீது பாகிஸ்தான் அடக்குமுறையை ஏவிவிட்டிருக்கிறதென்றும், கனிஅர் அஹமத்கானின் 3 சகோதரர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள் என்றும் இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

அநேக இளம்கலைவாசிகளும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்களாம்.

## சிரமதான இயக்கம்

### பல கட்சிகளும் கலந்துகொள்ளும்

பருத்தித்துறை, வெள்ளி

பொலிகண்டியில் இம்மாதம் 22-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் சிரமதானமுயற்சியில் தொண்டர்கள் மட்டுமன்றி சமசமாஜ கம்யூனிஸ்ட், தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ்வாலிபர் முன்னணியினரும் கலந்துகொள்ள முன்வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இச் சிரமதான இயக்கம் பற்றி இறுதி ஏற்பாடுகளைச் கவனிக்குமுகமாகவும் தொண்டர்கள் பற்றிய முழு விபரங்களை சேகரிக்குமுகமாகவும் பகுதிக்காரியாதிகாரி திரு ஜே. டி. ஆர்னல்ட் இம்மாதம் 17-ம்திகதி வல்வெட்டித்துறையில் மகாநாடொன்றைக் கூட்டவிருப்பதாக அறிவித்துள்ளார்.

## பூங்காவனத் திருவிழா

சங்கானை, வெள்ளி

சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோவில் பூங்காவனத்திருவிழா 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். காலை விசேஷ அபிஷேகமும் அன்னதானமும், இரவு திருக்கல்யாணமும் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## பாரதிதாசனுக்கு அஞ்சலி

சாவகச்சேரி, வெள்ளி

"நமது மத்தியில் நிலவுகின்ற சாதிப்பிரிவினையை வேரோடு களைந்தால்தான் இந்த நாட்டிலே சமதர்மம் நிலவும். நாமெல்லோரும் சமத்துவமாக வாழமுடியும், இதனால்தான் பாரதிதாசன் முன்னேற்றம் காணமுடியாது இருட்டறையில் உள்ள இன்றைய உலகத்தில் பகுத்தறிவுக் கதிரவனின் அவசியம்பற்றி தனது பாடல்களில் ஆணித்தரமாக வலியுறுத்தினார்" என்று தென்மராட்சி இளந்தமிழர்மன்ற தலைவர் திரு. நரசிம்மன்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற பாரதிதாசன் நினைவுவிழாவிற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் கூறினார்.

திருவாளர்கள் அல்ரன் ஆனந்தகுமார், கல்லதியாகராசா உட்பட வேறு சிலரும் பாரதிதாசனுடைய கவிதை நயத்தைப் பற்றிப் பேசினார்கள்.

## மக்கள் வங்கியில் ஏலவிற்பனவு

கல்முனை, வெள்ளி

கல்முனை மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற ஏலவிற்பனையில் ஏராளமான தங்கச்சங்கிலிகளும், வளையல்களும், மோதிரங்களும், தாலிக் கொடிகளும், தோடுகளும் விற்பனையானது. இந்த ஏலவிற்பனையின்போது மக்கள்வங்கி உயர்அதிகாரி ஒருவரும் பிரசன்னமாயிருந்தார்.

## பொதுக் கோயிலாக பிரகடனம்

யாழ்ப்பாணம். வெள்ளி

புங்குடுதீவு இருபிட்டி பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயம் ஏறக்குறைய 200 வருடங்கள் பழைமையானது. இது அரசாங்க அதிபரினல் பொதுக்கோயிலாகபிரகடனப்படுத்தப்பட்டு தர்மகர்த்தா சபையாரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கோவில் தர்மகர்த்தாசபைத் தலைவர் திரு. கு. வி. தம்பித்துரையின்பெருமுயற்சியால் திருத்தம் செய்யப்பட்டு அண்மையில் சம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மாதம் 26-ந் திகதிமகோற்சவம் ஆரம்பமாகும்.

தர்மகர்த்தர்சபைத்தெரிவில் திரு. கு. வி, தம்பித்துரை தலைவராகவும், திரு. ச, கனகசுந்தரம், காரியதரிசியாகவும் திரு. பெ. கார்த்திகேசு, தனாதிகாரியாகவும் திருவாளர்கள் வி, கார்த்திகேசு, ச. நாகராசா, சி. கணேசமூர்த்தி, ஆ. ஐயம்பிள்ளை ஆகியோர் தர்மகர்த்தாச்சபை அங்கத்தவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## வருட முடிவுக்குள் 40 டீசல் எஞ்ஜின்கள்

வெள்ளவத்தை, வெள்ளி

புகைவிரத சேவையில்உள்ள எஞ்ஜின்களை டீசல்மயமாக்கும் திட்டத்தின் முதற்படியாக இவ்வருட முடிவுக்குள் நாற்பது டீசல் எஞ்ஜின்கள் கனடாவிலிருந்து வருவிக்கப்படும் என்று அறியவருகிறது. இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நடாத்த புகைவிரத ஜெனரல் மனேஜர் திரு. பீ. டி. ரம்பாலை அடுத்தமாதத்தில் கனடா புறப்படுவார் என்று தெரிய வருகிறது. இவருடன் திரு. ஜான்ஸம் செல்வார். இவர்கள் தம்முடன் எடுத்துச செல்ல வேண்டிய பல விபரங்களும் இப்போது சேகரிக்கப்படுகின்றன.

முதலில் 40 டீசல் எஞ்ஜின்கள் வருவிக்கப்படும் என்றும் அதன்பின்னர் அடுத்த ஆண்டில் 40 டீசல் எஞ்ஜின்கள் வருவிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சச்சரவிட்டுக் கொள்பவரில் பலர் நாமெல்லாம் ஒரு நாள் சாகத்தான் வேண்டுமென்பதை உணர்வதில்லை; இதை உணர்ந்தவர்கள் தங்கள் தங்கள் சச்சரவுகளைத்தீர்த்துக் கொள்வார்கள்.

— புத்தர் பெருமான்.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 189.

விசுவாவசு ஆண்டு வைகாசி மீ 2உ (15-5-65)


## தமிழ்க்காங்கிரஸ் மகாநாடு

யாழ்ப்பாணத்திலே நேற்றுமுதல் நடைபெற்றுவரும் அகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸின் 20வது ஆண்டு மகாநாடு ஈழத் தமிழர் சரித்திரத்தில் மிக முக்கியமானதாகும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்க் காங்கிரஸ் அமைக்கப்பட்டபோது, நாட்டில் இருந்த சூழ்நிலைக்கும், இப்போதைய நிலைமைக்கும் எவ்வளவோ மாறுதல். அந்நிய ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந் காலம் அது. பின்னர் நாடு விடுதலை அடைந்தது. என்றாலும் தமிழருக்குச் சோதனைக்குப்பின் சோதனை ஏற்பட்டது. குடி உரிமையை மலைநாட்டுத் தமிழரில் பலரும் இழந்தனர். தமிழரின் மொழி உரிமையும் பறிக்கப்பட்டது. பல பல இம்சைகள் செய்யப்பட்டன. சிறுபான்மை சமூகத்தினர், ஜனநாயக மெனப்படும் ஆட்சிமுறையிலே இரண்டாம்பட்சப் பிரஜைகளாகவும், உரிமைகளையும் இழந்தும், பெரும்பான்மை வகுப்பினரின் ஆதிக்கத்தின்கீழ் தான் என்றென்றும் வாழவேண்டுமோ என்று திகைக்கக்கூடிய நிலை ஏற்பட்டது.

இங்கு பல சோதனைகளுக்கும் உட்பட்ட தமிழ் சமூகத்தினரிடையே தாங்கள் இழந்த உரிமைகளை மீண்டும் பெறவும், மானத்துடன் வாழவும் ஒற்றுமை இன்யமையாதிருக்க, தமிழ்த் தலைவர்களிடையே துரதிருஷ்ட வசமாக ஒற்றுமையோ ஒத்துழைப்போ இல்லை. அதனால் தமிழ் மக்களின் திகைப்பும் சங்கடங்களும் அதிகரித்தன. என்ன நேருமோ என்று தமிழ் மக்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் சென்ற தேர்தல் முடிவுகள் தெய்வாதீனமாக, இலங்கை அரசியலிலேயே புதிய நிலையை ஏற்படுத்தியது. தமிழரின் ஒத்துழைப்புடன்தான் எந்த அரசாங்கமும் இலங்கையின் முன்னேற்றத்துக்கான முறையில் ஆட்சி நடத்த முடியுமென்றும் நாட்டில் அமைதிநிலவ முடியுமென்றும் சென்ற 10 வருட அநுபவங்கள் காட்டிவிட்டதால், பொதுமக்களும் அதற்கான முறையில் தங்கள் தேர்தல் தீர்ப்பை அளித்தனர். அத்துடன் வகுப்புவாதத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது.

தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனே பிரதமர் டட்லி சேனநாயகா அமைத்துள்ள புதிய அரசாங்கத்தின்மூலம்தங்களது இழந்த உரிமைகள் மீண்டும் கிடைக்குமென்றும், தாங்களும் சரிசமமான பிரஜைகளாக இலங்கையில்வாழ முடியுமென்றும் தமிழ் மக்கள் ஆவலுடனும் நம்பிக்கையுடனும் இருக்கின்றனர். ஆனால் தமிழ்த் தலைவர்களுக்கிடையே விரும்பத்தக்கஒற்றுமை இல்லாதது தமிழ்ப் பொதுமக்களுக்குப் பெருங்கவலையும் மனவேதனையும் அளித்து வந்தது. சென்ற சில ஆண்டுகளிலே பல தவறுகள் நடந்திருக்கலாம். ஜனநாயக அரசியலிலே தவறுகள் நடப்பது புதிதல்ல. யார் தான் தவறு செய்யாதவர்கள்? ஆனால் பழைய தவறுகளையே நினைத்துக்கொண்டு தலைவர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் குற்றம்சாட்டிக்கொண்டு வேற்றுமைகளை வளர்ப்பதாயின் தமிழர் தாங்கள் இழந்த உரிமைகளைப் பெறமுடியாததுடன், அவர்களது மானமும் மதிப்பும் மேலும் குறைந்து பிறரது பரிகாசத்துக்கும் உட்படவேண்டியிருக்கும்.

அரசியல் அமைப்பைப்பற்றி கருத்து வேற்றுமைகள் இருப்பது சகஜம். வேற்றுமைக்கருத்துக்களைக் காரணமாகக் கொண்டு தமிழ்ப்பிரதிநிதிகள் தங்களிடையே விரோதத்தை வளர்த்துக்கொள்வது எவ்வகையிலும் சரியாகாது. வகுப்புவாதத்துக்கோ, குறுகிய அரசியல் வாதத்துக்கோ இப்போது இடமில்லை. மேலான அரசியல் ஞானத்தையும் அரசியல் தீர்க்கதரிசனத்தையும் சிறப்பாகத் தமிழ்த்தலைவர்கள் காட்டவேண்டிய சமயம் இது. ஈழத்தமிழரின் எதிர்காலத்தலை எழுத்து நிர்ணயிக்கப்படும் இச்சமயத்தில் மிகத்திறமைசாலியும், மேலான அரசியல் அனுபவமும், சிங்கள மக்களிடையே விசேஷ மதிப்பும் செல்வாக்குமுள்ள திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக்கொண்ட தமிழ்க் காங்கிரஸ், தமிழர் ஒற்றுமைக்கும் விமோசனத்துக்குமாக, மேலான அரசியல் ஞானத்துடன் நல்ல வழிகாட்டுமென நம்புகிறோம்.

# "தமிழினத்துக்கு விடிவு காணவே இம்மகாநாட்டைக் கூட்டியுள்ளோம்"

—உடுப்பிட்டி எம். பி.

## "ஒப்பந்தம் மூலம் பிரச்னைகள் தீராது"

### வாலிப முன்னணி மகாநாட்டு விபரங்கள்

யாழ்ப்பாணம், சனி

"தமிழினத்தின் வரலாற்றிலேயே இன்று ஓர் முக்கியமான தினம். கடந்த பல ஆண்டுகளாக சமஷ்டிக்கட்சியினரை ஆதரித்த காரணத்தினல் தமிழ்மக்கள் அடியும், உதையும், வசைச்சொற்களும் பட்டு அல்லற்பட்டதுபோதும். இனிமேலாவது நமது தலைமையின்கீழ் தமிழினத்திற்கு விமோசனம் கிடைக்குமென நம்புகிறேன் நாம் தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் வாக்களித்ததுபோன்று இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்குள் தமிழினத்தின் மிக முக்கிய பிரச்னைகளைக் கட்டாயம் தீர்த்துவைப்போம்" இவ்வாறு உடுப்பிட்டி எம். பி, திரு. மு. சிவசிதம்பரம் யாழ் நகரசபைமண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி 20-வது ஆண்டு மகாநாட்டில் பேசுகையில் கூறினர், அவர் தொடர்ந்து கூறியதாவது-

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலும் வேறு பல் கலைக்கழகங்களிலும் படித்துப் பட்டம்பெற்று வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு விமோசனமளிக்குமுகமாக நமது கட்சி தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது. தமிழ் வாலிபர்களின் வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை எமக்கு நன்கு தெரிகிறது. அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளும் நமக்குத் தெரியும். வாலிபர்களின் ஆதரவு கூடிவரும் இக்கட்டத்தில் அவர்களின் மனத்தைக் திருப்புமுகமாக மாற்றுக்கட்சியினர் நமது கட்சிக்கும் இடதுசாரிகளுக்குமிடையே இரகசிய தொடர்பு இருப்பதாகச் சமீபத்தில் பத்திரிகையில் அறிக்கை விடுத்துள்ளனர், தேர்தல்காலங்களில் இடதுசாரிக்கட்சியினரை எதிர்த்தும் கண்டித்தும் பகிரங்க மேடைகளில் பேசியதுடன் கண்டனங்களும் தெரிவித்தது நமது கட்சி என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்கு இரு மந்திரிகளின் விஜயம்பற்றித் தமக்கு அறிவிக்கவில்லையென்று குறைகூறுகிறார்கள், ஆனால் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு. திருச்செல்வம் யாழ்ப்பாணத்திற்கும், உடுப்பிட்டித்தொகுதிக்கும் வந்தபோது நமது கட்சியினருக்கு சிறப்பாக உடுப்பிட்டித் தொகுதி அங்கத்தவருக்கு எனக்கு அறிவித்தார்களா? சமீபத்தில் யாழ் கச்சேரியில் நடைபெற்ற—மந்திரிகளும், அங்கத்தவர்களும் கலந்துகொண்ட — மாவட்டக் குழுக்கூட்டத்தில் தமிழ்பேசும் வாலிபரின் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக உத்தியோகபூர்வமான குழுவொன்று தெரிவுசெய்யப்படவேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்தவர் நமது தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே யாவர். நமது வட்டமேசை மகாநாட்டை அரசாங்க பாராளுமன்றக்குழு நிராகரித்துவிட்டதாகக் கூறினார்கள், எந்த அரசாங்கப் பாராளுமன்றக்குழு நமது வட்டமேசை மகாநாட்டு யோசனையை நிராகரித்தது என்றுகேட்க விரும்புகிறேன்- கடந்த தேர்தலின் போது இரண்டுமாத கால குறுகியப்பிரசாரத்தில் நமது கட்சிக்கு 87,000 வாக்குகள் கிடைத்ததில் இருந்து நமது கட்சியில் தமிழ்மக்கள் எவ்வளவு பற்றுதல் வைத்திருக்கிறார்கள் என்பது புரிகிறது, வாலிபர்களுக்கு ஒரு முக்கிய வேண்டுகோள்-தேர்தல்காலத்தில் வெற்றிக்காக உழைத்தால்மட்டும்போதாது. நமது கட்சியின் வளர்ச்சிக்காக இன்னும் பல தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கிளைகளைத் தொடக்குவதன் மூலம் ஆயிரக்கணக்கான புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதன்மூலம் தமது உண்மையான சேவையை நிலைநாட்டவேண்டும். தமிழினத்தை மீண்டும் விடிவுப்பாதையில் அழைத்துச்செல்லவே இந்த மாநாடு கூட்டப்பட்டிருக்கிறது.

**மொழிப்பிரச்னை ஒரு தேசியப் பிரச்னை**

உடுவில் தொகுதி தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் திரு. ... பேசுகையில், மொழிப் பிரச்னை ஓர் தேசியப் பிரச்னை அகில இலங்கை ரீதியிலேயே இப்பிரச்னை தீர்க்கப்படவேண்டும். யு. என். பி யுடன் ஒப்பந்தங்கள் செய்வதன்மூலம் இப் பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாது. சகல கட்சித் தலைவர்களினதும் வட்டமேசை மகாநாடு ஒன்றின் மூலமே மொழிப்பிரச்னையைத் தீர்க்கமுடியும். பிராந்திய சபைகள் அமைப்பதன்மூலம் தமிழினத்தைத் திருப்திப்படுத்திவிடமுடியாது. பிராந்தியசபைகளை அமைக்கப்பட்டாலும் அவை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்களா? அவ்வாறாயின் தமிழுக்கு உரிமை எங்கே கொடுபட்டிருக்கும் இந்தப் பிரதேசசபை அமைப்பின் விளக்கம்தான் என்ன? எதுவகையிலும் பிராந்திய சபை அமைப்பை நாம் முற்றாகக் கண்டிக்கிறோம்" என்று கூறினார்.

**"வாலிபர்கள் விழிப்படையுங்கள்"**

வழக்கறிஞர் திரு. ஸ்ரீதரன் பேசுகையில், "மந்திரிகளின் வருகை பற்றித் தமக்கு அறிவிக்கவில்லை என்கிறார்கள். இது என்ன கலியாணவீடா நாம் அழைப்பதற்கு? இப்பொழுது சம்பிரதாயம் அது இது என்று நொண்டிச்சாக்குச் சொல்கிறார்கள். இவற்றினால் எல்லாம் தமிழ்மக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள், வாலிபர்கள் விழிப்படைந்துவிட்டார்கள். கடந்த தேர்தலின்போது தமது தீர்க்கமான முடிவைத் தெளிவாகக் காட்டிவிட்டார்கள் இந்த மகாநாட்டை நண்பன் அமிர்தலிங்கமோ அல்லது அண்ணன் மட்டக்களப்பு இராஜதுரையோ வந்து நேரில் பார்த்தால் கட்டாயம் தமது கட்சியிலிருந்தும் விலகி நமது கட்சியில் சேர்ந்துவிடுவார்கள். நம்மவர்கள் சிலர் அவர்களைச் சேர்க்க மறுப்போம் என்று கூறுகிறார்கள், ஆனால் வந்தாரை வரவேற்கும் பண்புடைத்தது நமது கட்சி, திருந்திவருபவர்களைக் கட்டாயம் அது வரவேற்கும் சிலவேளை இன்னும் சில மாதங்களில் தேர்தல் திரும்பி வந்தாலும் நமது இழந்த தொகுதிகளை மீண்டும் பெற முயற்சிக்கும் பணியில் வாலிபர்கள் ஈடுபடவேண்டும்" என்று கூறினார்.

**"விமோசனம் வேண்டும்"**



"காங்கேசன்துறை தொகுதி தமிழ்க்காங்கிரஸ் பிரமுகர் திரு சு ஸ்ரீபாஸ்கரன் பேசுகையில், "கடந்த பல ஆண்டுகள் கஷ்டமனுபவித்த பின்னர் இனிமேலாவது எந்தக் கட்சியுடன் சேர்ந்தால் நமக்கு விமோசனம் கிடைக்கும் என்பதைக் கடந்த தேர்தலில் எனது தொகுதியிலுள்ள மலர் நிரூபித்துவிட்டார்கள் இனிமேலாவது நல்ல கட்சியின் தலைமையின் கீழ் தமிழ் மக்கள் ஒன்றுபடவேண்டும்" என்று கூறினார்.

திருமலை மாவட்ட தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணிப் பிரதிநிதி திரு திருஞானசம்பந்தன் பேசுகையில், ஜூன் மாதத்தின் இறுதிப் பகுதியில் சகல தமிழ்க்காங்கிரஸ் பிரதி

(6ம் பக்கம் பார்க்க)

**ஐயாறன்**

**எழுதுவது**

திருப்பூந்துருத்தியைப்பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். திருவையாற்றுக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள அந்த ஊரிலேதான் ஞானக் குழந்தையான திருஞானசம்பந்தரின் சிவிகையை அப்பர் அடிகள் சுமந்தது. "அப்பர் எங்குற்றார்?" என்று அக்குழந்தை கேட்டதற்கு சிவிகையைச் சுமந்த அப்பர் "இங்குற்றேன்" என்று கூறியதும் இரு குரவர்களும் ஒருவரை ஒருவர் வணங்கிய திருப்பதியுமாகும் இது.

அந்தப் புண்ணிய பதியைப் பார்க்க ஒரு நண்பருடன் சென்றேன், கோவில் மிகப் புராதனமானது. வில்வ மரங்களில் மலர்ந்த மலர்கள் மிகரமணீயமான வாசனையைப் பரப்பி தூரச் செல்லுகையிலேயே மனதைக் கவர்ந்தன.

சிவாலயத்திலுள்ள நந்திகள் மூன்றும், சிவ சந்நிதானத்துக்கு நேரேயில்லாமல் சற்றே விலகி இருந்தது ஒரு புதுமை, நந்தனுக்காகத்தான் நந்தி விலகியதாகக் கேட்டிருக்கிறேம். இக்கோவில் நந்திகள் ஏன் இப்படி விலகவேண்டுமென்று விசாரித்ததில் ஒரு ருசியான கதையை நண்பர் சொன்னர்.

அப்பர் அடிகள் அந்த ஊரில் மடம் கட்டிக்கொண்டு கோவிலில் உழவாரத் திருப்பணி செய்வதாக ஞானக் குழந்தை கேள்விப்பட்டாராம். அப்பெரியவர் உழவாரத் திருப்பணி செய்யும் அந்தப் புனித இடத்தில் காலவைத்து மிதிக்கக் கூசி, கோபுர வாசலில் இருந்தே, ஞானசம்பந்த சுவாமிகள் தரிசனம் செய்யவே, நந்தியெம் பெருமான் விலகி மூலவரை அக்குழந்தைக்கு நன்கு தரிசிக்க உதவினாராம்! அதனால்தான் அங்கு மூன்று நந்திகளும் சந்நிதியிலிருந்து விலகி இருப்பதாக ருசியான கதையைக் கேட்டதும், கோவிலுக்குள் கால் வைத்து நடக்க மிகக் கூச்சமாக இருந்தது, இரு குரவர்களும் அங்கு சேர்ந்து வாழ்ந்த காலம் எப்படி இருந்திருக்கும்!

∴ ∴ ∴

அப்பர் அடிகள் கட்டியுள்ள புராதன மடத்தை நன்கு புதுப்பித்துள்ளனர். ஆனால் மடத்துக்குள் ஒன்றுமில்லை. அப்பர் சுவாமிகள் குருபூசையன்று அங்கு அன்னம்பாலிப்பு நடந்ததாம், அம்மடத்தின் உரிமையைப்பற்றி நீதிமன்றத்தில் வழக்கு நடப்பதாக அறிய மிக வருத்தமாக இருந்தது.

கோவில் சுவர்களிலே அப்பர் சுவாமிகளின் சரித்திரத்தை மிகக் கவர்ச்சியான சித்திரங்களாகத் தஞ்சாவூரைச் சேர்ந்த ஓர் ஓவியர் தீட்டியுள்ளார் அவசியம் பார்க்கவேண்டும். அந்தக் கோவிலும், மடமும், ஊரும் சைவ உலகத்திலே மீண்டும் புகழ் பெற்று இலங்குமென்பதில் ஐயமில்லை

"பூந்துருத்திப் பூந்துருத்தி என்பீராகில் பொல்லாப் புலால் துருத்தி போக்கலாமே" என்று அப்பர் சுவாமிகள் கூறியதை நினைத்துக் கொண்டே அங்கிருந்து திரும்பினேன்.

∴ ∴ ∴

"திருப்பூந்துருத்தி உபசாரம்" என்று ஒரு கதையுண்டு, அதாவது, அந்த ஊருக்கு விருந்தாக யாரும் வந்துவிட்டால், வீட்டுக்காரர், மிக சாமர்த்தியமாக, "வாருங்கள் வாருங்கள் நீங்களெல்லாம் சாப்பிட்டுவிட்டுத்தான் வந்திருப்பீர்கள். எனக்குத் தெரியுமே" என்று வெறும் வாய் உபசாரம் கூறி சாப்பாடு போடாமல் அனுப்பிவிடுவரென்று கதை. அந்த அவப்பெயர் தவறு என்பதை நேரில் அந்த ஊர் அன்பர் ஒருவர் நிரூபித்துவிட்டார், காலையில் சென்றதும் முதல் நம்பர் காப்பி கொடுத்தார்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் மகாநாடு

## இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் வருடாந்த மகாநாடு ஆரம்பமாகும். 9-15 மணிக்கு பிரார்த்தனை நடைபெறும். 9-30 மணிக்கு நியாயதுரந்தரர் திரு.எஸ். ஆர். கனகநாயகம் வரவேற்புரை நிகழ்த்துவார். 9-40 மணிக்கு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமைப் பேருரை நிகழ்த்துவார். 10-30 மணிக்கு காரியதரிசி அறிக்கை வாசிப்பார். 10-40 மணிக்கு சொற்பொழிவுகள். திருவாளர்கள்: மு சிவசிதம்பரம், தா. சிவசிதம்பரம், க. சரவணமுத்து (கொழும்புக்கிளைத் தலைவர்), திரு. ச. டேவிட். 12-00—2-00 போசன இடைவேளை. பிற்பகல் 2-00 மணி அரசியல் மகாநாடு தீர்மானங்கள். 4-00 மணிக்கு புதுவருட உத்தியோகத்தர் தெரிவு 4-45 மணிக்கு நன்றியுரை.

மாலை 6-30 மணிக்குகோட்டை மைதானத்தில் திரு ஜி ஜி பொன்னம்பலம் தலைமையில் பகிரங்க கூட்டம் நடைபெறும். பகிரங்க பொதுக்கூட்டத்தை தொடர்ந்து விசேஷ வாணவேடிக்கை நடைபெறும் பின்வரும் தொகுதிகளிலிருந்து ஊர்வலங்கள் பொதுக்கூட்ட மைதானத்தை வந்தடையும். பருத்தித்துறை, நெல்லியடி, புத்தூர், கோப்பாய் மார்க்கமா வரும், காங்கேசன்துறை, சுன்னாகம், கொக்குவில், வண்ணார்பண்ணை மார்க்கமாக வரும். வட்டுக்கோட்டை, மூளாய், சித்தங்கேணி, சங்கானை, மானிப்பாய் மார்க்கமாகவரும். சாவகச்சேரி, கைதடி நாவற்குழி, கச்சேரியடி மார்க்கமாகவரும் ஊர்காவற்றுறை, வேலணை, பண்ணை மார்க்கமாகவரும்.


**P. S. DISPENSARY**

DISPENSING CHEMISTS

AND

DRUGGISTS

P. S. FAMOUS

Asthma Cure

75, Power House Road,

JAFFNA.


# "பிரச்னைகளைத் தீர்க்க . . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

கட்சி இருக்கக்கூடாது. மக்களின் பிரச்னைகளை, தேவைகளை, வாலிபர்களின் கஷ்டங்களை, ஒன்று கூடி ஆராய்ந்து அவற்றைத் தீர்வுகாண வேண்டிய வழிகளை எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும் நாங்கள் அவற்றை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து, கஷ்டத்தை போக்குவோம்.

உங்கள் கிராமத்தை முன்னேற்றவேண்டிய வழிகளை, உங்கள் பகுதியில் பொருளாதார முன்னேற்றத்திற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எங்களுக்குத் தெரிவித்தால், அதற்கானவற்றை செய்வோம். உங்கள் தொகுதிக்கு தேவையானவற்றை ஒன்றுகூடி ஆலோசித்து எங்களுக்கு தெரிவியுங்கள்.

ஒன்று சேருவோம்.

தேர்தலுக்கு முன்பும், தேர்தல் சமயத்திலும், ஒன்று சேரும்படி மற்றக் கட்சியினருக்கு பகிரங்க வேண்டுகோள் விடுத்தேன் ஆனால் அவர்கள் நிராகரித்தார்கள் மீண்டும் அவர்களுக்கு வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைதீர்க்க ஒன்று சேரும்படி வேண்டுகோள் விடுகிறேன்.

### "பாரபட்சம் காட்டமாட்டோம்"

நான் மந்திரிசபையில் இருந்த காலத்தில் வலைச்சேனை காகிதத்தொழிற்சாலை, பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட விஷயத்தில் பாரபட்சமாக நடந்துகொள்ள வில்லை இனிமேலும் அப்படியே நடப்பேன்!



த: கா. தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம்

# பழைய மாணவர் சங்க நிர்வாகிகள்

கிளிநொச்சி, வெள்ளி

சமலன்குள அ. த. க. பாடசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. மு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பின்வருபவர்கள் நடப்புவருடத்துக்குரிய உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: மு. க. சுப்பிரமணியம், உபதலைவர்: ச நேசரத்தினம, காரியதரிசி. சி. சிவபாதசுந்தரம், உபகாரியதரிசி: சி விநாயகமூர்த்தி, தனாதிகாரி வே. சிவராசா, உபதனாதிகாரி: து. விஜெயலட்சுமி, காப்பாளர்: மு. சண்முகம், கணக்குப் பரிசோதகர்: செ, இராசேந்திரன்.

## வீடு விழுந்ததால் நால்வர் மரணம்

தெஹியோவிற்ற, வெள்ளி

அறுவது வயதுடைய புஞ்சிராளை என்பவரும் அவரது 10 வயது நிரம்பிய மகள் சோமபாலாவும் அவர்களது வீடு இடிந்து விழுந்த காரணத்தினால் கொல்லப்பட்டனர்.

அவிசாவெல பொலிஸ் பகுதியில் இரு சிறுவர்கள் அவர்களது வீடு இடிந்து விழுந்தபொழுது உயிர் நீத்தனர். ஆறு வயதுடைய வேறு ஒரு குழந்தையும் இரண்டு மாதக் குழந்தையொன்றும் கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 260 புதிய கிராம சேவகர்கள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

ஜூலை மாதத்தில் 260 கிராம சேவகர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்கள் நாடுபூராவும் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

## இன்னிசைவிருந்து

யாழ்ப்பாணம், சனி

இன்று மாலை மேணி தொடக்கம் தொண்டைமானாறு செல்வச்சன்னதி கோவிலில் சங்கீத பூஷணம் திருமதி பரஞ்சோதியம்மாள் இராசமாணிக்கம் ஓர் இன்னிசைவிருந்தளிப்பார்.


**ஆறுமுகம் நல்லதம்பி**

75, கஸ்தூரியார் றோட்,

யாழ்ப்பாணம்.

தங்கப்பவுண் நகைகள் கிடைக்குமிடம்

ஓடர்கள் குறித்த தவணைக்குச்செய்து கொடுக்கப்படும்

Telephone : 664


## மகா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

ஊரெழு வீரகத்தி விநாயகராலயத்தில் அண்மையில் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பர்வதவர்த்தினி சமேத ஆலயத்தில் மகா சங்காபிஷேகமும் அன்னதானமும் ஊரெழு பொதுமக்களால் நடாத்தப்பட்டன. சுமார் 600-க்கும் அதிகமான மக்கள் இதில் கலந்துகொண்டனர், சங்காபிஷேகத்தை சிவ ஸ்ரீ ச. பா. வைத்தியநாதக்குருக்கள் நடத்திவைத்தார்.


அழகான அச்சுவேலைகளுக்கு

**"கொம்மேஷல்"**

பிறஸ் & ஸ்ரோர்ஸ்

ரெலிபோன் : 615

28, 30, பெரிய தெரு,

யாழ்ப்பாணம்.



றலி சயிக்கிளுக்கும் மணிக்கூடுகள் திருத்துவதற்கும் பிரசித்தி பெற்றவர்கள்

**ரதி வாச் வேர்க்ஸ் அன் ஸ்ரோர்ஸ்**

தொலைபேசி : 7103

44-46; கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.



**VIT - MET**

**DOG FOOD**

New Malayan

Apothecaries

புதிய சிங்கப்பூர் மருந்துச் சாலை

268, Hospital Road,

JAFFNA.


# வாலிப முன்னணி தலைவராக வவுனியா எம். பி. தேர்வு

யாழ்ப்பாணம், சனி



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவராக வவுனியா எம். பி. திரு தா, சிவசிதம்பரம் ஏகமனதாக நேற்று காலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில்நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்டார்"

உபதலைவர்களாக பாரின்டர் எம். சிவானந்தன், திரு எஸ் ஸ்ரீபாஸ்க்கரன், திரு என்.சிவநேசன், திரு ஏ.அன்ரனி, திரு எம். யோகலிங்கம், திரு என் திருஞானசம்பந்தன். திரு எம். எல சுந்தரலிங்கம் ஆகியோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

செயலாளராக வழக்கறிஞர் திரு எஸ் ஸ்ரீபாஸ்கரன், ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்' உப செயலாளர்களாக திருவாளர்கள் நூர்முகம்மது கனகராசா, யோகேஸ்வரன் சின்னையா, எஸ ரகுநாதன் ரத்னவேலாயுதம், சி. கணேசமூர்த்தி ஆகியோரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். [illegible] காவலர்களாகவும், பரிசோதகராக திரு ஏ. [illegible] மூர்த்தியும் ஏகமன

தாக தெரிவுசெய்யப்பட்டனர், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதி ஒவ்வொருதொகுதிக்கும் 5 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர்.

## "தமிழினத்துக்கு. . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரிகளுக்குச். வேட்பாளர்களுக்கும் பொது வரவேற்பளிக்கத் தீர்மானித்திருக்கிறோம் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் மீண்டும் திருமலைக்கு வந்து தமது நல்ல கொள்கைகளையும் தீர்மானங்களையும் கூறி எமது மக்கள் மனதைத் திருப்பவேண்டும்" என்று கூறினார்

### வாலிபரின் அதிக ஆதரவு

உடுப்பிட்டித் தொகுதி வாலிபர்முன்னணியின் சார்பில திரு. செ கணேசமூர்த்தி பேசுகையில், 'கடந்த பல தேர்தல் மேடைகளில் நான் கேட்ட கேள்விகளுக்கு மாற்றுக்கட்சியினர் இதுவரையில் தகுந்த பதில் அளிக்கவில்லை அளித்திருந்தால் நான் என்றோ அவர்களுடன் சேர்ந்திருப்பேன் சில மேடைகளில் பொறுத்திருங்கள் தகுந்த பதில் தருகிறோம் என்று கூறியவர்கள் பின்னர் ஏமாற்றி விடுவார்கள் இன்று சகல கட்சிகளிலும் பார்க்க நமது கட்சிக்குத்தான் வாலிபர்களின் ஆதரவு பெருகியுள்ளது" என்று கூறினார்.

நல்லூர் வாலிபமுன்னணி சார்பில திரு. இரகுநாதன் பேசுகையில், "வீட்டில் முதலாளியும் மனைவியும் குழந்தைகளுடன் கோயிலுக்குச்சென்று பூஜைசெய்வது கஷ்டம்என்ற காரணத்தால் வேலைக்காரனை அர்ச்சனைக்கு அனுப்புவது போன்று மாற்றுக்கட்சியினர் அனுப்பிய ஒருவர் பாராளுமன்ற செனட்சபைவிவாதத்தில் தனிச்சிங்களச்சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்; சிங்களத் தலைவர்களே உச்சரிப்பதற்கு வாய் கூசிய இவ்வார்த்தைகளைத் தமிழினத்தின் பிரதிநிதி திரு. திருச்செல்வம் கூறியுள்ளார்!" என்று கூறினார்.

யாழ்ப்பாணத் தமிழ்க்காங்கிரஸ வாலிபமுன்னணிச்செயலாளர் ஜனப் நூர் முகம்மது நன்றிதெரிவித்துப்பேசுகையில் "மந்திரிகள் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது தமிழரசுக்கொடிகளையும் கட்டி நாமும் இருக்கிறோம் என்று காட்டிய சிலர் இன்றும் நமது மகாநாட்டின்போது யாழ்நகரில் தமிழரசுக்கொடிகளையும்பறக்க விட்டிருந்தார்கள். இதிலிருந்து நமது மகாநாட்டை அவர்களும் ஆதரிக்கிறார்கள் என்று தெரிகிறது யாழ்ப்பாணத் தொகுதியில் திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் சேவைகளைத் தமிழ்வாலிபர்கள் மறக்கமுடியாது" என்று கூறிச் சகலருக்கும் நன்றி கூறினார்


ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**சி. முத்துக்குமாரு அன் சன்**

நகை வியாபாரம்

175, காங்கேசந்துறை றோட்,

யாழ்ப்பாணம்.

போன் : 7152



**ஹாஜியார்ஸ்** நகை மாளிகை

யாழ்ப்பாணம் : கொழும்பு

டெலிபோன்

654 6941

தந்தி : "VIEMEMES"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வட்டமேசை மகாநாட்டை அரசாங்கம் கூட்டவேண்டும்"

பீசாலை, சனி

தமிழ் பேசும் மக்களின் சகல பிரச்னைகளையும் நிரந்தரமாக தீர்க்கும் முகமாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லாக்கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு வட்டமேசை மகாநாட்டை மிக விரைவில் அரசாங்கம் கூட்டவேண்டும். அப்படியானால்தான் எதிர்காலத்தில்தேர்தல் சமயத்தில் எவரும் தமிழர் பிரச்னைகளை கிளப்பமாட்டார்கள் என்று சாவகச்சேரி தமிழ் காங்கிரஸ் கிளை காரியாலயத்தில் நடைபெற்ற சாவகச்சேரி தமிழ்காங்கிரஸ கிளையின் வருடாந்த கூட்டத்தில் பாரிஸ்டர் திரு எம். சிவானந்தன் கூட்டத்திற்கு தலைமைவகித்து பேசும்போது கூறினர்.



திரு. சிவானந்தன் மேலும் பேசியதாவது:- சிறப்பட்ட இரு கட்சிகளுக்கிடையே தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் இரகசிய ஒப்பந்தம் மூலம் தீர்க்கப்பட்டால் அடுத்ததேர்தலில் மற்றக்கட்சிகள் தமிழ் பேசும் மக்களின் பிரச்னையை வைத்தே தேர்தல்நடத்த முற்படும் இதனால் இந்நாட்டில் தமிழர்களின் பிரச்னை என்றும் தீர்க்கப்படாமலே இருந்து வரும் எல்லாக்கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாட்டில் இப்பிரச்னைக்கு ஒரு சுமுகமான முடிவு காணப்பட்டால், தேர்தல் சமயத்தில் தமிழர் பிரச்னை தோன்றாது. கடந்த 9 வருட காலமாக எதிர்க்கட்சியினர் மொழிப் பிரச்னையையும் தமிழர் பிரச்னையையும் வைத்து மே தேர்தலில் வெற்றி பெற்றுவந்தனர். 1956-ம் ஆண்டும் 1960-ம் ஆண்டு நடந்த தேர்தல்களிலும் எதிர்க்கட்சியினர் மிக சுலபமாக வெற்றி பெற்றதற்கு மொழிப்பிரச்னையே காரணம். தமிழர் பிரச்னை இருகட்சிகளுக்குமிடையே ஒப்பந்தம் மூலம் தீர்க்கப்பட்டால் 1970-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலிலும் எதிர்க்கட்சியினர் மொழிப் பிரச்னையை கிளப்பி வெற்றி பெற முயற்சிப்பார்கள். ஆதலால் மொழிப் பிரச்னைக்கும், தமிழர்களின் பிரச்னைக்கும் முடிவு காண வேண்டுமானால் அது வட்டமேசை மகாநாட்டினால்தான் முடியும். எல்லாரும் சேர்ந்து செய்யப்பட்ட முடிவுக்கு எதிராக எவரும் குறைகாணமாட்டார்கள்.

புதுவருட உத்தியோகஸ்தர் விபரம்; போஷகர்: திரு. ஜி ஜி. பொன்னம்பலம் கியு. சி., தலைவர்: பாரிஸ்டர் திரு. எம் சிவானந்தன், உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். கே. செல்லையா, சு. கனகரத்தினம், ஏ. சுப்பிரமணியம், எஸ. இராசரத்தினம், எஸ. தம்பு, செயலாளர் திரு எஸ் பி மயில்வாகனம், பொருளாளர்: திரு வி எஸ் இராசையா பத்தர், 15 பேர் கொண்ட ஒரு மத்திய கமிட்டியும் 9 பேர் கொண்ட ஒரு செயல் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## "மொழிப்பிரச்னை தீர்வதற்கு....."

யாழ்ப்பாணம், வெள்ளி

"ஜனநாயக முறையை இலங்கையில் நிலைநாட்டவே தேசிய அரசாங்கத்தை ஆதரித்தோம். மொழிப்பிரச்னை சம்பந்தப்பட்டமட்டில் இந்நாட்டில் தமிழினம், இரண்டாந்தரப் பிரஜையாக வாழ என்றும் சம்மதிக்கமாட்டேன். சிங்கள மக்களுக்கு சிங்களம் எப்படியோ அதேபோல் தமிழ்மக்களுக்கும் தமிழ் மொழி இருக்கவேண்டும் என்று பாராளுமன்றத்திலும் கூறியுள்ளேன்" என்று திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## கொடிகளில் ஒற்றுமை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண நகரில் பல இடங்களிலும் நேற்று ஏராளமான கொடிகள் கம்பீரமான தோற்றத்துடன் பறந்து கொண்டிருந்தன. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சிக் கொடிகளும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக் கொடிகளும் நேற்று நகரில் பறந்து கொண்டிருந்தன. சில இடங்களில் இருகட்சிக் கொடிகளும் ஏற்றத்தாழ்வின்றி "ஒற்றுமையாக" ஒரே இடத்தில் பறந்து கொண்டிருந்ததைக்காணமுடிந்தது. வியாபாரஸ்தாபனங்களின் கட்டடங்களிலும் பெரியமரங்களிலும் மட்டுமின்றி வீடுகளிலும் கட்சிக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன,


ஐஸ்பழம் ஐஸ்கிறீம் ???

சாப்பாட்டு வகைகள், புதியாணி, முறுத்தப்பா, முட்டை ரொட்டி இன்னும் பல வகைச் சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்

மில்க் பார்

பெரியதெரு, யாழ்ப்பாணம்

சி. தம்பிப்பிள்ளை அன் சன்

உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமான

நகை வியாபாரிகள்

191, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்கள் அச்சு வேலைகள்: தொலைபேசி: 274

○ தமிழ் ○ சிங்களம்
○ ஆங்கிலம் ○ சமஸ்கிருதம்

ஆகிய நான்கு மொழிகளில், எந்த மொழியில் செய்யப்படவேண்டும்?

எந்தமொழியிற் செய்யப்பட வேண்டுமாயினும்

யாழ்ப்பாணம்

32, கண்டி வீதியில் உள்ள

ஆசீர்வாதம் அச்சகம், புத்தகசாலையில்

நியாயமான செலவில், குறித்த நேரத்தில் செய்வித்துக் கொள்ளலாம்.

Manufacturers of Yarl Brand Aluminium Utensils of Guaranteed Pure Aluminium

★

Electro-Deposition of Metals done Scientifically

GOLD, SILVER, CHROMIUM & NICKEL

Yarl Metal Industries, Jaffna

250 - 252, K. K. S. Road, Jaffna.

ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஒருமுறை விஜயம் செய்தால் திருப்தி அளிக்கும்.

பொது மக்கள் எம்மிடம் பலமுறை விடுத்த வேண்டுகோளை குறிக்கோளாகக்கொண்டு நிறுவப்பட்ட மருந்துச்சாலை. மேல்நாட்டு மருந்துவகைகள் பால் வகைகள் என்னும் பல. நிதானமான விலைக்கு எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒருமுறை விஜயம் செய்யவும்

ஜனன் மருந்துச்சாலை

முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

றேடியோ, அம்பிளிபயர் மற்றும் இலக்றிக் சாமான்கள் விற்பனையிலும் திருத்துவதிலும் முதல்தர ஸ்தாபனம்

S. சுலைமான்கண்டு & பிறதர்

86, கே. கே. எஸ். றோட் யாழ்ப்பாணம்.

தந்தி: "JAHAANS" போன்: 265

ஹைவிட்டாமீல்

என்பதின் பொருள்

உங்கள் பண்ணை உயிரினங்களிலிருந்து ஆகக்கூடுதல் ஆதாயத்தை பெறுவீர்கள் என்பதே.

கால் நடைகளினதும், கோழி முதலிய பறவைகளினதும் எல்லா தீன்களும் ஒரே மாதிரிதான் என்பதாக அனேகர் கருதுகிறார்கள். அவை அப்படியல்ல. அவற்றில் அனேக வித்தியாசங்கள் இருக்கின்றன. வித்தியாசங்கள் என்பது நீங்கள் அடையும் கூடுதல் அல்லது குறைந்த ஆதாயத்தை கொடுப்பதுதான்.

ஏனெனில் ஹைவிட்டா

* கூடுதல் போஷாக்கையும் தாதுப் பொருட்களைகொண்ட கால்நடைத் தீன்.
* இலகுவாக கலந்து உடனடியாக சீரணமாகிறது.
* அதி நவீன பக்குவ முறைப்படி கட்டுப்பாடான நிலைமைகளில் ஆரோக்கியமான விதத்தில் நெடுங்காலம் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடியதாக தயாரிக்கப்படுகிறது.
* கோழிக்குஞ்சுகளுக்கும், நடுத்தரகோழிகளுக்கும் முட்டையிடும் கோழிகளுக்கும்இன்றியமையாத ஓர் கலவை தீன்.

உங்கள் பண்ணையில் உயிரினங்களுக்கான ஆதாயத்தை கொடுக்கும் தீனியை வாங்க திட்டமிடும்போது ஹைவிட்டா தீனியையே வாங்குவதென திட்டமிடுங்கள்.

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள் ... லிமிடெட்

டெலிபோன்: ஜா-எல-216 ... 5767

சுகாதாரமும் சரீரசாத்திரமும்

அல்லது

சுகாதாரவியல்

ஆசிரியர்:

திரு. நா. நடராசா B. SC., Hons: M. A.

மீள் பார்வை

திரு. நா. இராமலிங்கம்

கல்விப் பகுதியாரின் பாடவிதானத்துக்கு அமைய விரிவான முறையில் கலைச் சொற்கள் சேர்த்து எழுதப் பெற்றது.

விலை: 8-50 பக்கம்: 1000

கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம் - கண்டி - மட்டக்களப்பு


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வழக்கறிஞரின் வாதம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

தொழில் கோர்ட்டுக்கு நீதி பரிபாலன சேவைக் கமிஷன் மட்டுமே அங்கத்தவர்களை நியமிக்கலாமென தொழில் கோர்டு சம்பந்தமான ஒரு வழக்கொன்றில் கம்டனி ஒன்றின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு, எச். வி. பெரேரா கியூ. ஸி. வாதாடினார்.

தொழில் கோர்டுகளுக்கு நீதிபரிபாலன சேவைக் கமிஷனால் நியமிக்கப்படாத ஒருவர் தலைமைவகிக்கலாமா என்பது குறித்து முரணான அபிப்பிராயங்கள் நிலவுவதால் இது குறித்து ஒரு விளக்கமான முடிவுக்குவரும் பொருட்டு பிரதம நீதியரசர் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்திருந்தார். நேற்று இதுபற்றி ஆலோசனை செய்த பொழுது வழக்கறிஞர் பெரேரா முன் குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

## ஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திசங்கத்தின் ஆதரவில் இம்மாதம் 17-ம் 18-ம் திகதிகளில் திருஞானசம்பந்தர் குருபூசை நடைபெறவிருப்பதாகவும் முதல் ஸ்ரீ சி எஸ். எஸ், மணிபாகவதரின் சங்கீத கதாப்பிரசங்கமும். அடுத்த நாள் சொற்பொழிவுகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம்நாள் பிரதம பேச்சாளராக திரு. எஸ். அம்பிகைபாகன் கலந்து கொள்வார்.

## மாணவர் மன்றக் கூட்டம்

கோண்டாவில், வெள்ளி

கோண்டாவில் மாணவர் மன்றக்கூட்டம் கோண்டாவில் மேற்கில் திரு. க. மகானந்தன் தலைமையில் நடைபெற்றது. மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட கொக்குவில் கிராமசபை இரண்டாம் வட்டார அங்கத்தவர் திரு. செ. பத்மநாதன் பேசுகையில் கோண்டாவில் கிராமத்திற்குத் தேவையான மின்சாரம் வழங்கக்கூடிய நிலையிருந்தும் அப்படி வழங்கப்படாமலிருந்ததற்குப் பழைய உறுப்பினர்களே காரணமென்றும் இதன் விளைவாக இக்கிராமத்தைச் சீர்திருத்துவதற்குத் தலைவருக்குக் கஷ்டமேற்பட்டதென்றும் கூறினர்.

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்தை அழைத்து ஒரு தேநீர்விருந்தளிப்பதென்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## செயற்குழுக்கூட்டம் ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வெள்ளி

இவ்வார இறுதியில் மட்டக்களப்பில் நடைபெறவிருந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் வசதியீனங்கள் காரணமாக திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## பரீட்சைக் கமிஷனருக்கு எம். பி. கோரிக்கை

சாவகச்சேரி, வெள்ளி

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜி. ஸி. ஈ (சாதாரணம்) பரீட்சைக்கான விண்ணப்பங்களை பெறுவதற்கான கடைசித் திகதியை ஒரு வாரகாலத்துக்கு ஒத்திவைக்குமாறு பரீட்சைக் கமிஷனரை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அவசர தந்தி மூலம் கேட்டுள்ளார். 14,15-ம் திகதிகள் பொதுவிடுமுறையாதலால் தபால் விநியோகம் எதுவும் இருக்காதென்பதால் கடைசித் திகதியை ஒருவார காலத்துக்கு ஒத்திவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது,

## பெற்றர்-ஆசிரியர் சங்க கூட்டம்

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாட்சாலைப் பெற்றர் ஆசிரியர் சங்கம், நலன் கருதும்சபை ஆகியவற்றின் விசேஷபொதுக்கூட்டம் ஒன்றுதலைமையாசிரியர் திரு த. சிதம்பரடபிள்ளை தலைமையில் கூடிய பொழுது பாடசாலைகளின் தேவைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

கட்டிடப் பற்ருக்குறை, தளபாடங்களின் பற்ருக்குறை ஆகியவைபற்றி முறையே பாராளுமன்ற உறுப்பினர் திரு மு.சிவசிதம்பரத்துக்கும், வடமராட்சி உதவி வித்தியாதிபதிக்கும் மகஜர்களைச் சமர்ப்பிப்பதுடன் நேரிலும் சென்று பேட்டிகாண ஐவர் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. பாடசாலையைச் சுற்றி முட்கம்பி வேலி போடுவதற்கு ஆசிரியர்களிடமும் பெற்ருேரிடமும் நிதி உதவி கோருவது பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டது.

## அரசியல் சொற்பொழிவுகள்

பருத்தித்துறை, வெள்ளி

புரட்சிவாத சமசமாஜவாலிபமுன்னணியின் வடமராட்சிக் கிளை பகிரங்க அரசியல் சொற்பொழிவுகளை இம்மாத பிற்பகுதியில் நடத்துவதற்குஏற்பாடு செய்துள்ளது,

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்திற்கு திரு கா, கணபதிப்பிள்ளை தலைமை தாங்குவார்எனவும் வை காராளசிங்கம் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சில தினங்கட்கு வடமராட்சியின் பல இடங்களிலும் அரசியல் வகுப்புகள் நடைபெறும் எனவும் இறுதியாக நடைபெறவிருக்கும் கூட்டத்தில் திரு எட்மன்ட் சமரக்கொடி பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வார் எனவும் தெரிய வருகிறது,

## சிரமதானம்

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி கிழக்கில் ஏப்ரல் மாதம் 18ந்திகதி யன்று ஆரம்பிக்கப்பட்ட பாதைப் புனரமைப்பு சிரமதானப் பணிபொதுமக்களது ஒத்துழைப்பால் புதிய திருப்பத்தை அடைந்து வருகிறது.

பாதை ஓரத்திலுள்ள வீட்டுக்காரர்களும் காணி உரிமையாளர்களும் எல்லைகளைப் பிடுங்கி நிலம்விட்டு உள்ளே அடைக்கும் வேலையைத் தாமே செய்து கொடுக்க முன்வந்திருப்பதால் சிரமதானத் தொண்டர்களின் வேலைப்பளு ஓரளவு குறைந்து வருகிறது.

26 வது தினமாக இன்று இப் பணியில் சுமார் 30 வாலிபர்கள் கலந்து கொண்டனர், இதுவரை சுமார் 1200 பேர் இப் பணியில் ஈடுபட்டனர் எனவும் சுமார் 2 மைல் நீளம் வரை சென்றுள்ள இவ்வேலை 4000 ரூபா வரை மதிப்பிடக் கூடியது எனவும் கூறப்படுகிறது,

புலோலி கிழக்கு 1-ம் கட்டையில் ஆரம்பமான இவ்வேலை கற்கோவளம் பெருந்தெருவை இன்னும் ஒருவார காலத்தில் சென்றடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சிரமதானங்களில் இதுவே நீண்டநாள் கொண்ட வேலையாகும் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

## புதியநிர்வாகிகள்

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறை ஜேசீட்டறி கிளப்பின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்; திரு கே. இராசரட்ணம் உபதலைவர்: திரு வி, செல்லத்தம்பி காரியதரிசி; திரு எம்,அற்புதநாதன் தனாதிகாரி: திரு எஸ்,ஏ. இராசநாயகம்

ஜேசீட்டறி கிளப்பினுல் செய்யப்பட்டு வரும் பல்வேறு வகைப்பட்ட சேவைகட்கும் தலைவர்களாக காரியாதிகாரி திரு யே.டி. ஆர்னல்ட், நகரசபைத் தலைவர் திரு க. நடராசா. வழக்கறிஞர் திரு கே. இரத்தினசிங்கம், மாக்பெட்டிங் இலாகாவைச் சேர்ந்த திரு ச. கெங்காதரம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பாராட்டு தீர்மானம்

சாவகச்சேரி, வெள்ளி

தென்மராட்சி இளந்தமிழர் மன்ற கைதடிக் கிளையின் மாதாந்தக்கூட்டம் தலைவர் திரு, ஆ. கந்தையாவின் தலைமையில் நடைபெற்றபொழுது தேசிய அரசாங்க மந்திரி சபையில் ஸ்தலஸ்தாபன மந்திரியாக திரு. எம், திருச்செல்வம் நியமிக்கப்பட்டதையிட்டுப் பாராட்டுத் தெரிவித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

## "அன்பே பெரிது"

### கவர்னர் ஜெனரலின் வெசாக் செய்தி

பம்பலப்பிட்டி, வெள்ளி

"உலகத்தில் ஏற்படும் தீமைகள் நாங்கள் உலகத்திலுள்ள பொருள்களின் மீது வைக்கும் ஈடுபாட்டின் காரணமாகவே எழுகின்றது. எந்த நிலையிலும் எவர்க்கும் இறப்பு பொதுவாகவே அமைகின்றது. ஒருவர் பணம் படைத்த பிரபுவாக இருக்கலாம் அல்லது ஏழையாக இருக்கலாம். ஆகையால் நாங்கள் வெசாக்கின் அடிப்படை உண்மைத் தத்துவத்தை மனதில் பதிய வைக்கவேண்டும்" என்று மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா விடுத்த வெசாக் செய்தியொன்றில் குறிப்பிடடுள்ளார்.

மேலும் அச்செய்தியில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:-

"கோபம், பொருமை, வஞ்சகம், முதலியன ஒரு மனிதனின் வாழ்வை தாழ்த்துமே ஒழிய உயர்த்தாது. நாம் அன்பாகவும் பரிவுடனும் பிறருடன் நடந்துகொள்ள வேண்டும். அன்புதான் இவ்வுலகின் இன்ப ஊற்று. அடுத்த வெசாக் தினத்திற்கு முன்னதாக உலகத்தில் நல்லெண்ணமும் பரஸ்பர நம்பிக்கையும் வளர நல்ல சூழ்நிலை ஏற்படுமென்று நான் பூரணமாக நம்புகின்றேன்,"

### பிரதமர் செய்தி

"இந்த புனித வெசாக் தினத்தில் நாட்டில் உள்ள சகலரும் கோபம், விரோதம், பலாத்காரம் முதலியவற்றை மறந்து உண்மைப் பௌத்தர்கள்போல எல்லோரையும் அன்புடனும் கருணையுடனும் நடத்துவோமாக" என்று பிரதமர் திரு, டட்லி சேனநாயக்கா நாட்டு மக்களுக்கு வெசாக் தினத்தையொட்டி விடுத்த செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து பிரதமர் அச்செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

"பௌத்த மதம் தோன்றிய இந்தியாவில் பௌத்த மதம் மறைந்திருக்கும் இத்தருணத்தில் எங்கள் நாட்டு மக்கள் பௌத்த மதத்தை பல நூற்றுண்டு காலமாக பேணிக் காத்துவந்திருக்கின்றனர். ஆகையால் எங்கள்மீது சுமத்தப்பட்ட கடமை மிகவும் பொறுப்புவாய்ந்ததாகும், ஆகையால் நாங்கள் புத்தருடைய சமாதானப் போதனையை உலக மக்கள் அனைவருக்கும் பரப்புவோம்,"

## இப்படியும் நடந்தது

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி கந்தோரில் லிகிதராகக் கடமையாற்றும் ஆர். பி. சுப்பிரமணியம் என்பவரை ஊர்காவற்றுறை காரியாதிகாரி கந்தோருக்குக் கடமையாற்றுமாறு கேட்டுக்கொள்ளும் கடிதம் ஒன்று நேற்று காலை 11-20 மணியளவில் அவருடைய வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பின்னர் ஒரு மணியளவில் அதே தினத்தில் சங்கானை காரியாதிகாரி கந்தோரிலேயே கடமையாற்றுமாறு கேட்டுக்கொள்ளும் கடிதமொன்றும் ஒரு விசேஷ தூதுவர் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. அரசியல் காரணங்களைக்கொண்டு இவ் விடமாற்றம் நடைபெற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், பின்னர் எம். பி. ஒருவர் இவ்விஷயத்தில் தலையிட்டு சீர் செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது. அச்சுவேலி, மாவிட்டபுரம்,மல்லாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மூவர் சங்கானை காரியாதிகாரி கந்தோருக்கு புதிதாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,







அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

★ 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
★ 8 சர்வதேசபரிசுகளைச் சுவீகரித்தது.
★ இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
[illegible]
[illegible] பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர்-அங்கத்தவர் லடாய்!

## சூடான விவாதத்தில் கடும் சொற்கள் பிரயோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி "உங்களை மேயராகப் பிரேரித்திருக்கக்கூடாது, நாங்கள் நினைத்திருந்தால் வேறெருவரை நியமித்திருக்கமுடியும்" என்று நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் விவாதம் உச்சகட்டத்தை அடைந்தபோது கொழும்புத்துறை வட்டார அங்கத்தவர் திரு. த. சுந்தரையா மேயரைப் பார்த்துக் கூறினர். கொழும்புத்துறை வட்டார அங்கத்தவருக்கும் மேயருக்குமிடையில் நடைபெற்ற காரசாரமான விவாதத்திற்கிடையில் முன்னுள் மேயர் திரு. அல்பிரட் துரையப்பா குறுக்கிட்டுப் பேசி விவாதத்தை ஒருமுடிவுக்குக் கொண்டுவந்தார்.

கொழும்புத்துறை வட்டாரத் தண்ணீர் விநியோகத் திட்டம் பற்றி அண்மையில் நடந்த அசம்பாவித சம்பவம் பற்றிச் சபையில் பேசப்பட்டபோதே மேற்கண்ட விவாதமேற்பட்டது.

மேயர் பத்திரிகைக்குத் தவறுன அறிக்கை வெளியிட்டு மக்களைக் குழப்பியுள்ளாரென்றும் அந்த அறிக்கை பொய்யென மேயர் பத்திரிகைக்கு மறு அறிக்கை விடவேண்டுமென்றும் கொழும்புத்துறை வட்டார அங்கத்தவர் கூறிய பொழுது திரு. தெய்வேந்திரம் குறுக்கிட்டு இரு கடிதங்களை சபையில் காட்டி அக்கடிதங்களைப் பத்திரிகைக்கு அனுப்பப்போவதாகவும் கூறி, அக்கடிதங்களை வாசித்துக்காட்டினர். பானா எ[illegible]பவருக்குச் சிறில் என்பவரால் எழுதப்பட்ட அக்கடிதத்தில் தண்ணீர் பைப சம்பந்தமாக எழுதப்பட்டிருந்தது.

மேயரிடமிருந்து எவ்வளவு பெறமுடியுமோ, அவ்வளவு பெற்று வட்டாரத்தைத் திருத்தவுமென்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. திரு துரையப்பாவின் கேள்வியொன்றுக்கு ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 1,000 அடிக்கு மேல் பைப் கொடுத்ததாக மேயர் ஒத்துக்கொண்டார். மேயருக்கு ஒரு தகுதியிருக்க வேண்டுமென திரு. தெய்வேந்திரன் ஒருகட்டத்தில் கூறினர்.

சூடான விவாதத்தின்போது காடையன், சண்டியன் போக்கிரி என்ற சொல்மாரியும் பொழியப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சூடான விவாதம் ஒருமுடிவுக்கு வந்தது.

சபை நடவடிக்கைகளைக் கவனிக்க உடுத்துறையிலுள்ள பாடசாலை மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் வந்திருந்தனர். அவர்களை மாநகர சபை அங்கத்தவர் திரு ராஜசூரியர் வரவேற்று, பார்வையாளர் பகுதியிலிருந்து விவாதங்களைக் கவனிக்கும்படி கூறினர். விவாதத்தின் தரம்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டனராம்.


**REGAL – JAFFNA**
**NOW SHOWING**
Anthony Quinn-Silvana Mangano
in
**BARABBAS**
(Techniscope-Technirama)



**இப்பொழுது திரையிடப்படுகிறது!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்டனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) லிஜிதா (ஹட்டன்) தீவொலி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி காலை, 10-00, பிற்பகல் 2-30, 6-30, 9-30




★ சிவாஜி கணேசன்
★ எஸ்.எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
**பச்சை விளக்கு**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

சைவப்பயிர் நடந்தது

# தாரதாரம் குறைந்தவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்!

யாழ்ப்பாணம், வெள்ளி நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் மற்றுமொரு ருசிகரமான சம்பவம் நிகழ்ந்தது.

பொது நூல்நிலயத்துக்கு உதவி மேற்பார்வையாளர் ஒருவரின் நியமனம் குறித்து நேர்முகமுடன் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஜே. எஸ். ஸி தராதரம் உடைய ஒருவருக்கும் எஸ். எஸ். ஸி, தராதரமுடைய மற்றுமொருவருக்குமிடையே போட்டி ஏற்பட்டது குறித்து, எஸ், எஸ். ஸி தராதரமுடைய விண்ணப்பத்தாரர் மாநகர சபையில் முன்னர் வேலை செய்தவர் என்றும் தட்டச்சு தெரிந்தவர் என்றும் கூறப்பட்டது. ஜே. எஸ். ஸி தராதரமுடையவருக்கு இதில் முன் அனுபவம் இருக்கவில்லையாம், இவர்களில் யாரை நியமிப்பது என்பதுகுறித்து இறுதியில் வாக்கெடுப்பு நடைபெற்று ஜே. எஸ். ஸி தராதரமுடைய வரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரை ஆதரித்து திருவாளர்கள் கலதான், தெய்வேந்திரம், அ. த. துரையப்பா, டி. எஸ். துரைராஜா, துரைராஜசிங்கம், ஏ. நடராஜா, ஏ. எஸ். ராஜசூரியர், தம்பு சுந்தையா ஆகியோர் வாக்களித்திருந்தனர்

எஸ். எஸ். ஸி. தராதரமுடையவரை ஆதரித்து திருவாளர்கள் எஸ் அழகையா, அன்ரனி, எம் அபுலாலி, சேவியர், பீட்டர் சோமசுந்தரம், எஸ். சி, மகாதேவா ஆகியோர் ஆதரித்து வாக்களித்தனர், திரு. பேரின்பநாயகம் வாக்களிக்கவில்லை, திரு. நாகராஜா, திரு. செல்லத்துரை ஆகியோர் சபைக் கூட்டத்தில் சமூகமளிக்கவில்லை.

மேற் குறிப்பிட்ட நியமனத்துக்கு ஏராளமானவர்கள் விண்ணப்பித்திருந்தனர் என்றும் இவர்களில் அதிகமானவர்கள் எஸ். எஸ். ஸி. தராதரமுடையவர்கள் என்றும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன

# 'ரஷ்ய-இந்திய உறவு வலுப்பெற்றுள்ளது'

## கட்ச் சம்பவம், வியட்நாம் நிலைமை குறித்து பேச்சு ஆரம்பம்

மாஸ்கோ, மே 13

அரசியல் பொருளாதார துறைகளில் இந்தியாவும் சோவியத் யூனியனும் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன என்றும் இருநாடுகளினது உறவுகளும் அபிவிருத்தியடைந்து வருகிறதென்றும் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் தெரிவித்துள்ளார்.

இன்று பகல் சோவியத் பிரதமருக்கு இந்தியப் பிரதமர் சாஸ்திரி அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையில் தான் பிரதமர் கோஸிஜின் மேற்கண்டவாறு கூறினர். இந்த வைபவத்தில் உதவிப் பிரதமர் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

"சோவியத் இந்திய உறவு பிரிக்க முடியாதது. இருநாடுகளும் ஒன்றையொன்று நன்கு புரிந்திருக்கிறது. இந்தியா மீது ரஷ்யா தனிமதிப்பு வைத்திருக்கிறது' என்றும் பிரதமர் கோஸிஜின் கூறினர்.

பிரதமர் சாஸ்திரி பேசுகையில்; ஆசியாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை மோசமாக இருக்கிறதென்றும் நெருக்கடி நீடிக்கிறதென்றும் கூறினர். தகராறுகளை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டுமேதவிர பலவந்தம் ஆயுத உபயோகிப்பு மூலம் தீர்க்கக் கூடாதுஎன்றும் கூறினர்.

**லெனின்கிராட் விஜயம்**

பிரதமர் சாஸ்திரி சனிக்கிழமை லெனின்கிராடுக்கு விஜயஞ்செய்வார், இவருடன் பிரதமர் கோஸிஜினும் செல்வார். மாஸ்கோவுக்கு விஜயஞ் செய்யும் ஒரு வெளிநாட்டுப் பிரதமருடன், மாஸ்கோவை விட்டு பிரதமர் கோஸிஜின் செல்வது இதுவே முதற்தடவையாகும். இதொரு அசாதாரண நிகழ்ச்சியாகுமென்று பார்வையாளர்கள் கருதுகின்றனர். பிரதமர் சாஸ்திரி லெனின்கிராடில் இரு நாட்கள் தங்குவார்.

# 5 இரட்டைத்தட்டு பஸ்கள் அடுத்தவாரம் இங்கு வரும்

சாவகச்சேரி வியாழன்

அடுத்த வாரம் மேலும் 5 இரட்டைத் தட்டு பஸ்கள் வடபகுதியில் சேவைக்கமர்த்தப்பட்டவிருக்கின்றன. அடுத்த வாரத்தில் 5 இரட்டைத் தட்டு பஸ்களை வடபகுதிக்கு அனுப்புமாறு தேசியமய சேவைகள் மந்திரி இ. போ. ச. நிர்வாகத்தினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேசியமய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாவிடமிருந்து சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்துக்கு இன்று கிடைத்துள்ள அவசரத் தந்தியொன்றில் அடுத்தவாரம் வடபகுதிக்கு 5 பஸ்கள் அனுப்பப்படுமென மந்திரி உறுதியளித்துள்ளார். வடபகுதியில் பஸ் சேவையைச் சீர்படுத்த மேலும் இரட்டைத்தட்டு பஸ்களை வடபகுதிக்கு அனுப்புமாறு திரு. வி. என். நவரத்தினம் மந்திரியைக் கேட்டிருந்தார். வடபகுதியின் பஸ் சேவையைச் சீர்திருத்தவேண்டுமெனக் கோரியிருந்த மற்றைய எம். பி.க்களுக்கும் மந்திரி [illegible] தந்தியை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

## காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை

கோண்டாவில், வெள்ளி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் கிளையொன்று நேற்று முன்தினம் கோண்டாவில் மேற்கில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டது. பின்வருவோர் வாலிப முன்னணி உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், போஷகர்- திரு வி அருணம்பலம், தலைவர்- ச. சற்குணநாதன், காரியதரிசி- மு. வாமதேவன், தனாதிகாரி- இ. புண்ணியமூர்த்தி. இவர்களுடன் 17 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:

செருக்கப்புலம் கோண்டாவில் வெள்ளவாய்க்கால் ஊடறுத்துச் செல்லும் திருத்தும்படி கிராமச்சபை தலைவரையும் உள்ளூராட்சி மந்திரியையும் கேட்டுக் கொள்வது

கோண்டாவில் இருபாலை வீதிக்கு, யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக கோப்பாய் சந்தி வரை பஸ்சேவையை ஆரம்பிக்குமாறு தேசிய மயசேவைகள் மந்திரியைக் கேட்டுக் கொள்வது.

## திருமணப் படலம்

கோப்பாய், வெள்ளி அச்சுவேலி உலவிற்குளம் பிள்ளையார் கோவிலில் கந்த புராணம் தெய்வானை அம்மன் திருமணப்படலம் படிக்கப்பட்டது. பல அன்பர்கள் கலந்துகொண்டனர். விசேஷ அபிஷேக ஆராதனையும் நடைபெற்றது.

## ஐயாறன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ். கோவிலில் மடம் முதலியவற்றைத் தரிசித்து வந்ததும், நல்ல உணவு அளித்தனர்.

அந்த வசனம் எப்படி ஏற்பட்டதாம் தெரியுமா? அது ஒரு கதை. திருவையாற்றிலே "சப்தஸ்தானம்" எனும் ஏழூர் திருவிழா மிகச் சிறப்பாக நடக்கும். நந்திகேசுவரரின் கல்யாண ஊர்வலமாம் அது. திருவையாற்று ஐயாற்றப்பர், அறம் வளர்த்த நாயகியுடனும் புதுமணத் தம்பதிகளுடனும் இரு பல்லக்குகளிலே திருப்பழனம், திருவேதிகுடி, திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் முதலிய ஊர்களில் ஊர்வலமாக வரும் போது, ஆங்காங்கே வீட்டுக்கு வீடு அன்னதானங்கள் நடக்கும். திருப்பூந்துருத்திக்கு சுவாமி வருவதற்கு இரவு 12 மணியாகுமாம். சுவாமி வந்தபின்தான் சாப்பிடவேண்டுமென்ற நியதியுண்டு. இரவு 12 மணிக்குமேல் யார் சாப்பிடுவர்! சாப்பிட முடியாதவர்களை, அவ்வூரார் சாப்பிடும்படி உபசாரம் செய்வரென்றும், அதனுல்தான் அந்த அவப் பெயர் ஏற்பட்டதாகவும் அறிந்தேன்.

நேற்று விசாகத்தன்றுதான் அங்கு சப்தஸ்தான திருவிழா. தஞ்சை மராட்டிய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த காடேராவும் மற்றும் பல வீட்டினரும் ஏதேஷ்டமாக அன்னதானம் செய்கிறார்கள். ஆகவே அந்த வசனம் இப்போது சற்றும் சரியாகாது.

ஃ ஃ ஃ

அங்கு வேறு பல பெரியோர்களும் தவம் செய்துள்ளனராம், அவர்களுக்கான மடங்களையும் பார்த்தேன். போதேந்திரஸ்வாமிகள் அங்கு ஒரு மாமரத்தடியில்தான் தவம் செய்தாராம். பிரம்மாண்டமான அந்த மரம் 400 வருடங்களானதென்று நண்பர் சொன்னர். இப்போதும் அது செழுமையாகப் பூத்துக் காய்க்கின்றது. குன்றக்குடி அடிகளாரின் ஆதீன நிர்வாகத்தில்தான் அந்த மடம் நடக்கின்றதாம். தாமரைத் தடாகமும், இயற்கை அழகும் யார் மனதையும் கவரும். அவசியம் பார்க்கவேண்டிய புனிதஸ்தலம் திருப்பூந்துருத்தி.

ஃ ஃ ஃ

ஓதியாருமறிவாரில்லையோதி யுலகெலாம், சோதியாய் நிறைந்தான் சுடர்ச்சோதியுட் சோதியான், வேதியாகி விண்ணாகி மண்ணோடெரி காற்றுமாய், ஆதியாகி நின்றானும் ஐயாறுடைய ஐயனே.

–திருஞானசம்பந்த சுவாமிகள்

## "மொழிப்பிரச்னை ...."

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜி ஜி பொன்னம்பலம் வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசும் போது கூறினர்.

மொழிப்பிரச்னையை ஒரு கட்சி மட்டும் தீர்க்கமுடியாது என்பது முற்றாக உணர்ந்த உண்மை என்றும் எதிர்க் கட்சியினரும் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒரு வட்டமேசை மகாநாட்டின் மூலம் அதை தீர்க்கவேண்டுமென்றும் திரு. பொன்னம்பலம் மேலும் பேசும் போது கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org